# விடுதலைப்புலிகள்

குரல்: 32 புரட்டாதி - 1992 அன்பளிப்பு: ரூபா 5-00


# புலிகளின் அபார சாதனைகள்;

# இராணுவ போர் உறுதி சீர்குலைவு

சிறீலங்காப் படையின் போரிடும் உறுதி அண்மைக்காலத்தில் பாரிய சிதைவைச் சந்தித்துள்ளது. சிங்கள இராணுவ இயந்திரத்தின் முக்கிய தூண்களாக இருந்த பல உயர் தளபதிகள் ஒரேநாளில் - ஒன்றாகக் கொல்லப்பட்ட அராலித்துறைக் கண்ணிவெடிப்புடன் எதிரியின் போரிடும் உறுதி சரிவடையத் தொடங்கியது.

சிங்களப் போர்வானின் நம்பிக்கை நட்சத்திரங்களாக இருந்த இந்த உயர் தளபதிகளின் இழப்பால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீளமுன், அடுத்தடுத்து மணலாற்றிலும் - திருக்கோணமலையிலும் - மட்டக்களப்பிலும் - பூநகரியிலும் - இராணுவம் சந்தித்த பேரழிவுகள், மேலும் மேலும் படையினரது போரிடும் உறுதியை ஆட்டங்காணச் செய்து வருகின்றன.

போரிடும் உறுதியில் ஏற்பட்டுள்ள இச்சிதைவானது, சிறீலங்காப் படையினர் மத்தியில் மட்டுமல்லாது சிறீலங்காவின் அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், சாதாரண சிங்கள மக்கள் உட்பட, முழுச் சிங்கள இனத்தின் மத்தியிலும் போர் தொடர்பாக அவர்கள் முன்னர் வைத்திருந்த நம்பிக்கையைச் சீர்குலையச் செய்துள்ளது.

கணிசமான தொகையினரான சிங்கள இளைஞர்கள் படையைவிட்டு ஓடுகிறார்கள்.

படையில் சேருவதற்குச் சிங்கள இளைஞர்கள் பெரிதும் பின்னடிக்கிறார்கள்.

போர்வெறியை - இனவெறியைச் சிங்கள மக்களுக்கு ஊட்டிவந்த சிங்களப் பத்திரிகையாளர்கள், போரின் வெற்றி தொடர்பாக அவநம்பிக்கை கொண்டு கருத்துக்களை வெளியிடுகின்றார்கள்.

எல்லைப்புறங்களில் அத்துமீறிக் குடியேறியிருந்த சிங்களவர்கள், அச்சத்தின் காரணமாகக் குடியெழும்பிச் செல்கின்றனர்.

படை உயர் அதிகாரிகளிடையே போர் தொடர்பான கருத்து முரண்பாடுகள் அதிகரித்துள்ளன.

இவையெல்லாம், எதிரியின் போரிடும் உறுதி சிதைந்து வருவதால் ஏற்பட்டு வரும் பக்க விளைவுகளையே காட்டுகின்றன.

கடந்த மாதம் 8ஆம் திகதி அராலித்துறையில் கொல்லப்பட்ட லெப். ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விமலரட்ண, வைஸ் அட்மிரல் ஜெயமகா ஆகியோர் தமிழீழம்மீதான ஆக்கிரமிப்புப் போரைத் திட்டமிட்டு வழிநடாத்திவந்த, முக்கிய தளபதிகளாவர்.

இவர்களது திடீர் இழப்பால், இராணுவரீதியான அடுத்த நகர்வு என்ன? அதை எங்கிருந்து, எப்படிச் செய்வது? என்று சரியாகக் கணிப்பிடுவதற்குத் தேவையான அனுபவம் வாய்ந்த இராணுவத் திட்டமிடலாளர்கள் இல்லாது, படைத்துறைத் தலைமைப்பீடம் குழம்பியபடியுள்ளது.

இதேசமயம், கொல்லப்பட்ட இந்த உயர் அதிகாரிகளின் போர்த்திறமைகளில் பூரண நம்பிக்கை கொண்டு சமர்க்களங்களில் சண்டையிட்ட சாதாரண படையினர், இத்தளபதிகள் இல்லாத சமர்களைப்பற்றி அவநம்பிக்கை அடைந்துள்ளார்கள்.

படையினரைப் போலவே சாதாரண சிங்கள மக்களும் இந்த உயர் தளபதிகளின் இழப்பால் மனத்தளர்ச்சியடைந்துள்ளனர்.

இவ்விதமாக அராலித்துறைக் கண்ணிவெடிப்புடன் ஏற்பட்ட மந்தநிலையும் - மனச்சோர்வும் சிங்கள இனத்தைப் பீடித்திருந்தபோதுதான், அடுத்தடுத்து, தமிழீழத்தின் பல முனைகளிலும் சிங்களப் படைகள் மீது தாக்குதல்களை நடாத்தி, 160 இற்கும் மேற்பட்ட சிங்களப் படையினரைக் கொன்றதுடன், 100 இற்கும் மேற்பட்ட ஆயுதங்களையும், பெருந்தொகையான வெடிப்பொருட்களையும் - இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றினோம். அத்துடன், சிங்கள அரசையும், படைத்துறைத் தலைமையையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில், கடற்படையின் அதிவேக நீருந்து விசைப் படகொன்றையும் அவர்களின் மண்டைதீவுத் தளத்திலிருந்து கைப்பற்றினோம். பாரிய இராணுவ இழப்புகள் படையினரது மன உறுதியை ஆட்டங்காணச் செய்துவிட்டன.

09 - 09 - 92 அன்று மணலாற்றில் சிங்கள இராணுவம் மீது ஒரு பதுங்கித் தாக்குதலைச் செய்தோம். இருபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஆனால் 30 நவீன ஆயுதங்களைக் கைப்பற்றியிருந்தோம்; பல இராணுவத்தினர் சண்டையிடும் மனோநிலையிலில்லாது ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓடினர்.

இதேபோன்று 10 - 09 - 92 அன்று மூதூரில், ஆற்றைக் கடக்க முற்பட்ட ஒரு இராணுவ அணி சென்று கொண்டிருந்த படகுப்பாதையில் வைக்கப்பட்டிருந்த பாரிய குண்டொன்று வெடித்ததில், இருபத்து நான்கு படையினர் உயிரிழந்தனர். இது, படையினர் மத்தியில் இனம் புரியாத ஓர் அச்ச உணர்வையும் - இயலாமையையும் ஏற்படச் செய்தது.

மேலும், 21 - 09 - 92 அன்று மட்டக்களப்பில் இராணுவத்தின்மீது நடாத்தப்பட்ட ஒரு பதுங்கித் தாக்குதலிலும், இருபத்துமூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அண்மையில் 25 - 9 - 92 அன்று, பூநகரிஇராணுவ முகாம் மீது, ஒரு திடீர்த் தாக்குதலைத் தொடுத்து, 25இற்கும்மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்று அவர்களது ஆயுதங்களையும் கைப்பற்றியிருந்தோம். இத்தாக்குதலை நாம் நிகழ்த்திய போது, ஏராளமான சிங்கள இராணுவத்தினர் தமது காவல் அரண்களையும் இரண்டு மினி முகாம்களையும் விட்டுவிட்டு, தளத்தின் மையப் பகுதி நோக்கித் தப்பி ஓடினர். படையினரின் போரிடும் உறுதி உடைந்து போவதையே, இது காட்டுகின்றது. இதேசமயம் அடுத்த நாள் மீண்டும் பூநகரி முகாமின் பலமான ஒருபகுதி மீது தாக்குதலைத் தொடுத்து, கடற்படையினர் பயன்படுத்தும்- 8 கி.மீ. தூரம் ரவைகளைப் பாய்ச்சும் - கனரக துப்பாக்கி ஒன்றை (14 . 5 MMZPU - 2) கைப்பற்றி அழித்தோம். இத்தாக்குதலில் நான்கிற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன், அவர்களுடைய ஆயுதங்களையும், பெருந்தொகையில் வெடிப்பொருட்களையும் கைப்பற்றியுள்ளோம்.

இவ்வாறாக தமிழீழத்தின் பல முனைகளிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் திடுக்கிடவைக்கும் தொடர்தாக்குதல்கள், சிங்களப்படையினர் மத்தியில் திகிலை ஏற்படுத்தி, அவர்களின் போரிடும் உறுதியை மேலும் மேலும் சீர்குலையச் செய்து வருகின்றன.

( 2 ஆம் பக்கம் பார்க்க )

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

TAMIL EELAM

# புலிகளின் குரல்

## தம்ம தீபமும் தமிழர் தாயகமும்

சிங்கள இனத்தின் பூர்வீக வரலாறு மிகவும் பூடகமானது. மகாவம்சத்தின் புராணக் கட்டுக்கதைகளிலிருந்து இந்த வரலாறு ஆரம்பமாகிறது. மிகவும் வினோதமான அம்புலிமாமா கதைபோல, ஒரு சிங்கள ராசாவின் விரசமான காதல் விவகாரத்திலிருந்து, சிங்கள இனத்தின் வரலாறு தோற்றம் கொள்கிறது.

பௌத்த பிக்கு ஒருவரின் எழுத்தாணியிலிருந்து ஊற்றெடுத்த ஒரு அலாதியான கற்பனைக் காவியம், விஜயனையும் அவனது தோழர்களையும் ஈழத் தீவில் குடியமர்த்திவிடுகிறது. வட இந்திய ஆரியமும் அரச குலத்து இரத்தமும் சிங்கள இனத்தின் பூர்வீகத்தோடு சேர்க்கப்படுகிறது. கற்பனைக் காவியத்தின் கதாநாயகர்கள் வரலாற்று மனிதர்களாக அவதாரம் எடுத்தார்கள். புராணத்துப் பொய்மைகள் மெய்மை ஆக்கப்பட்டு, சிங்கள தேசத்தின் வரலாறு திரிக்கப்பட்டது.

சிங்கள பௌத்தம் வரலாற்றுப் புரட்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அரச உருவாக்கத்திலும் ஆதிக்கம் செலுத்தியது. அந்தக் காலத்திலிருந்தே ஆச்சிரமத்து ஆன்மீக அறநெறிகள் அரண்மனைக்குள் புகுந்துகொண்டன. பற்றுகளைத் துறந்து பரிநிர்வாணம் வேண்டிநின்ற கௌதமரின் துறவறத் தத்துவம், அதிகாரப் பற்றுக் கொண்ட அரசியல் உலகில் பிரவேசித்தது. அரசர்கள் போதிசத்துவர்களாக மாறினர். ஆசையைக் கொல்லவேண்டிய ஆன்மீகத் துறவிகள் அரசியல் பிக்குகளாக அதிகாரபீடம் ஏறினர். தர்ம சீலம் அதிகார அரசியலுக்குள் புதைந்துபோனது. காருண்ய மார்க்கம் பேரினவாதமாகப் பேயுருவம் பெற்றது. வாளேந்திய சிங்கத்துடனும் அரச இலையோடும் ஆதி திராவிட இனக்குழு ஒன்று, அதியுன்னத தேசியமாகத் தன்னைப் பிரகடனப்படுத்தியது.

மனித குலத்தின் உன்னத மக்கள் சமூகமாக யூத இனத்தையும், பூமியில் புனித தேசமாக இஸ்ரேலையும் எபிரேயக் கடவுள் தேர்ந்தெடுத்தார் என்கிறது, சியோனிசவாதம். இப்படியானதொரு தீர்க்கதரிசன அற்புதத்தைச் சிங்கள பௌத்தமும் சிருஷ்டித்துவிட்டிருக்கிறது. இந்தக் கற்பனைக் கருத்துருவாக 'தம்ம தீப' கோட்பாடு பிறந்தது.

பௌத்த தர்மத்தைப் பவுத்திரமாகப் பாதுகாக்க ஒரு புனித நாடும், ஒரு புனித இனமும் புத்த பெருமானால் தெரிவுசெய்யப்பட்டதாம். அரச மரத்தின் கீழ் சித்தார்த்த முனிக்கு பிரம்மஞானம் பிறந்த பொழுது இப்படியானதொரு மண்பற்றும், இனப்பற்றும் தோன்றியதாக சிங்கள பௌத்தம் கற்பனை செய்திருக்கிறது. இந்தக் கற்பனை வளத்தில் இலங்கைத் தீவு தர்மத்தின் இருப்பிடமாக, புத்தபெருமானின் திருவருட்பேறுபெற்ற புனித பூமியாக மாற்றப்பட்டது. இப்படியாக ஒரு புராணத்து ஐதிகம் வரலாற்று உண்மையாகத் திரிக்கப்பட்டு, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இரத்தமும் சதையுமாக உயிர் வடிவம் பெற்றது.

இந்த ஐதிகத்தின் அடிப்படையில் சிங்கள இனம் இலங்கைத் தீவு முழுவதற்கும் சொத்துரிமை கொண்டாடியது. 'தம்ம தீபம்' ஒரு இனத்திற்கே உரித்தான உடைமையாக மாறியது. ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு, இறைமை என்பதெல்லாம் சிங்கள இனத்தின் நில ஆதிபத்திய உரிமையை நிலைநாட்டும் கோட்பாடுகளாக அமைந்தன. புத்தரின் புனித பூமியில் ஒற்றை ஆட்சி என்ற போர்வையில் ஒற்றை இன சர்வாதிகாரம் தலைதூக்கியது.

புனித நாடு, புனித இனம், புனித மதம் என்ற கோஷங்களுடன் வெறிகொண்டு எழுந்த சிங்களப் பேரினவாதம் தமிழர்களை வெறுத்தது. விரோதிகளாகக் கருதியது. வேண்டப்படாத அந்நியர்களாக ஒதுக்கியது. இலங்கைத்தீவின் பூர்வீக குடிகளாக, நீண்ட வரலாற்றுடனும், நாகரீகத்துடனும், தனித்துவ தேசியமாக, தனக்கே உரித்தான தாயக மண்ணில் வாழ்ந்து வரும் தமிழீழ மக்களை அங்கீகரிக்க மறுத்தது.

தமிழரின் வரலாறு மறுக்கப்பட்டது.
தமிழரின் தாயகம் மறுக்கப்பட்டது.
தமிழரின் தேசியம் மறுக்கப்பட்டது.

புராணத்துப் பொய்களை வரலாற்று உண்மைகளாக, விசாரணையின்றி விழுங்கிக் கொண்டதால், தமிழரின் வாழ்வியல் மெய்மையை ஏற்றுக்கொள்ள சிங்கள இனவாதம் மறுத்தது. இதனால் எழுந்த இன முரண்பாடு போராக வெடித்தது. புனித பூமி ரணகளமாக மாறியது.

தம்ம தீபம் என்பது வெறும் புராணத்து ஐதீகமாக சிங்களவரின் மனவுலகக் குகைக்குள் வசித்து வரவில்லை. அது ஒரு பூதாகர ஆக்கிரமிப்புச் சக்தியாக, ஆயுதம்தரித்து தமிழரின் தாயகத்தை பலாத்காரமாக விழுங்கிவிட பகீரத முயற்சி செய்து வருகிறது.

தமது சொந்த மண்ணில், காலம் காலமாக வாழ்ந்துவந்த தமது வரலாற்றுத் தாயகத்தில், நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டுமென்ற தமிழரின் நியாயமான, நீதியான நிலவுரிமைக் கோரிக்கை, கடந்த நாற்பது ஆண்டுகால இடைவெளியில், முறிந்த பேச்சுக்களும், உடைந்த ஒப்பந்தங்களும், முடிவில்லாப் போர்களுமாக இழுபட்டு, இன்று ஒரு பெரும் நில ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்கொண்டு நிற்கிறது.

வரலாற்றுத் திரிப்பால் எழுந்த தம்ம தீப கோட்பாடும், வரலாற்று எதார்த்தத்தில் பிறந்த தமிழர் தாயகக் கோரிக்கையும், இரு தேசிய இனங்கள் மத்தியில் தீர்க்கமுடியாத பெரும் முரண்பாடாக விரிசலை விழுத்தியிருக்கிறது. இதனால் அரசியல் தீர்வுக்கான இடைவெளி மூடப்பட்டிருக்கிறது

படைகளைத் திரட்டி, படையெடுப்பு நடத்தி, நிலத்தைப் பிடித்து, முள்வேலி போட்டு, புனித பூமியை விரிவாக்கம் செய்யும் இராணுவவாதக் கொள்கையும் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பியக்கத்தால் ஆட்டங்கண்டு வருகிறது.

தமிழர் தாயகத்தை ஏப்பம்விட எண்ணிய சிங்கள பௌத்த பேரினவாதம், என்றுமில்லாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது.

மத புராணத்து மாயையில் தோன்றிய இனவாத வெறியிலிருந்து சிங்கள தேசம் விடுபடாதபட்சத்தில், தமிழர் தாயகம் பிரிந்து சென்று, தனிநாடாகத் தனித்து வாழும் வரலாற்று நியதி தவிர்க்கமுடியாததாகிவிடும். ✲

## புலிகளின் அபார சாதனைகள்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றவாசிகளுக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த வண்ணான்குள இராணுவ முகாமை 11-07-1992 அன்று நாம் தாக்கி அழித்தோம். அதைத் தொடர்ந்து, வவுனியா மாவட்டத்தின் எல்லையோரமெங்கும் இராணுவத்தின்மீது நடாத்திய சிறு சிறு தாக்குதல்களின் விளைவாக, வவுனியாப் பகுதியில் இருந்து அச்சத்தின் காரணமாக சிங்களக் குடியேற்றவாசிகளும் வெளியேறத் தொடங்கினர்.

இதேபோன்று மணலாறு மாவட்டத்திலிருந்தும், திருக்கோணமலை மாவட்டத்திலிருந்தும் சிங்களக் குடியேற்றவாசிகள் வெளியேறிச் செல்ல முயல்கின்றனர்.

இது சிறீலங்கா அரசுக்குப் பெரிய சிக்கலைக் கொடுத்துள்ளது.சகல போர்முனைகளிலும் போரிட்டுக்கொண்டு, அதே சமயம் இக்குடியேற்றங்களுக்கும் பாதுகாப்புக் கொடுத்து அவர்களை மீளக் குடியமர்த்தத் தேவையான ஆட்பலம், சிங்களப் படையிடம் இல்லை; சிங்கள இளைஞர்கள் படையில் சேரவும் அஞ்சுகின்றார்கள்.

அதேசமயம் அண்மைக் காலத்தில் சிங்களப்படை சந்தித்துவரும் தளபதிகள் – உயர் அதிகாரிகளின் இழப்பால், போரின் துயரம் சிங்கள உயர் குழாத்திடமும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது.

சிறீலங்காப் படையைப் பொறுத்தளவில் பெரும்பாலும் உயர்அதிகாரிகள், தளபதிகள் பதவிகளை வகிப்பவர்கள் சிங்கள உயர்குழாத்தைச் சேர்ந்தவர்களே என்பது, குறிப்பிடத்தக்கது. இத்துடன் பேரினவாத சிறீலங்கா அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியும் இவர்களேயாகும். இவர்களுடன் சேர்ந்து போர்வெறியை – இனவெறியை ஊட்டிவந்த சிங்களப் பத்திரிகையாளர்களும், போரில் அவநம்பிக்கை கொள்ளத் தொடங்கி உள்ளனர்.

இவ்விதம் தமிழ்த் தேசிய இனத்திற்கெதிரான போரின் சித்தாந்த ஊக்கிகளாகச் செயற்பட்டு, சாதாரண சிங்கள மக்களுக்கு இனவெறியை – போர் வெறியை – ஊட்டிவந்த சிங்கள உயர்குழாமும் பத்திரிகையாளர்களும், போரின் விளைவை உணரத் தொடங்கியுள்ளனர். இதனால் எதிர்காலத்தில் அரசும் சில நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டி நேரிடும்.

இதேவேளை, புதிய புதிய நவீன ஆயுத தளபாடங்களைப் பெருமளவில் கொள்வனவு செய்து அவற்றைப் போரில் பயன்படுத்துவதன்மூலம், சீர்குலைந்துள்ள போரிடும் உறுதியைச் சீர்செய்ய முடியும் எனப், படைத்துறைத் தலைமை எண்ணுகின்றது. ஆனால் இந்த ஆயுத பலத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய பொருளாதார பலம், இன்று சிறீலங்கா அரசிடம் இல்லை.

இவையெல்லாம் ஒன்றுசேர்ந்து, எதிரியின் போரிடும் உறுதியை நலிவடையச் செய்து வருகின்றன. ✲

## செல்லுங்கள், வீழ்த்துங்கள், வெல்லுங்கள்!

*எதிரியின் அழிவில்தான் எங்களது வெற்றியே தங்கியிருக்கின்றது. எங்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக்கொண்டிருக்கும் இராணுவ வீரனது உயிர் பிடுங்கப்படும்வரை, எமது போராளிகள் உயிரிழந்து கொண்டேயிருப்பார்கள். எனவே, எதிரியின் அரண்களுக்குள்ளே வேகமாகச் செல்லுங்கள்; முடிந்தவரை விரைவாக எதிரிகளை வீழ்த்துங்கள்; அதன்மூலம் வெற்றியைப் பெறுங்கள்.*

— தலைவர் பிரபாகரன்

# அராலித்துறைச் சாதனைக்குப் பின்னால்...

கடந்த ஆவணி மாதம் 8 ஆம் திகதி அராலித்துறையில் இடம் பெற்ற ஒரு கண்ணிவெடித்தாக்குதலில் சிக்கி, வடபிராந்தியப் படைத் துறைத் தலைமைத் தளபதிகளான லெப். ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விமலரட்ணா, றியர் அட்மிரல் ஜெயமகா ஆகியோர் உட்பட ஒன்பது உயர் அதிகாரிகளும், ஒரு இராணுவச் சிப்பாயும் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இக்கண்ணிவெடித்தாக்குதலுக்கு உடனடியாகவே நாம் உரிமை கோரியிருந்தோம்.

ஆனால், அகற்றப்படாதிருந்த 'பழைய கண்ணிவெடி' ஒன்றில் சிக்கியே தமது தளபதிகள் உயிரிழந்தனர் என, சிறீலங்கா அரசு கூறியது. அதாவது, தீவகம் சிங்களப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட முன்னர் புலிகளினால் அது புதைக்கப்பட்டிருந்தது என்றே, சிங்களப் படைகள் விளக்கமளிக்கின்றன.

ஆனால், சிங்கள அரசு கூறுவது போல அது பழைய கண்ணிவெடி அல்ல.



வீரவேங்கை
எல்லாளன் – நிசாந்தன்
(பொன்னுத்துரை தங்கத்துரை)
வேலணை மேற்கு.



வீரவேங்கை புனிதன்
(நமசிவாயம் சிறிதரன்)
புங்குடுதீவு.

தீவகத்திலிருந்து யாழ்ப்பாணம் மீதான படையெடுப்புக்குரிய முன்னேற்பாடுகளைச் சிங்கள இராணுவம் செய்யத்தொடங்கிய அண்மைக்காலத்திலேயே, இக் கண்ணியைப் புதைத்தோம்.

தீவகத்தைச்சூழ, சிங்களப்படை அமைத்து வைத்திருந்த பாதுகாப்பு வியூகங்களை ஊடுருவி- உள்நுழைந்த எமது சிறப்பு வேவுப்பிரிவினர், இந்த வீரசாதனையைப் புரிந்தனர்.

இந்த உண்மையைச் சிங்களப் படைகளும் சிறீலங்கா அரசும் நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தும், அதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளத் தயக்கம் காட்டுகின்றன.

தமது பாதுகாப்பு அரண்களை ஊடுருவி, இந்த இராணுவ சாதனையைப் புலிகள் செய்துள்ளார்கள் என்று வெளிப்படையாகக் கூற, வெட்கப்படுகின்றார்கள்.

ஆனாலும், இக்கண்ணியானது ஒரே தடவையில் அல்லது ஒரே நாளில் சுலபமாகப் புதைக்கப்பட்டதல்ல. பல இடர்கள் - உயிரிழப்புகள் மத்தியில், பலநாட்கள், பல வேவுவீரர்களினால் பல்வேறு இடங்கள் பரிசோதிக்கப்பட்டபின், பொருத்தமான ஓர்இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இக் கண்ணி புதைக்கப்பட்டது.

இக்கண்ணி புதைக்கப்படவெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம், வெறும் வெளியுமல்ல; தினமும் படையினர் பயணம் செய்யும் பாதையுமல்ல.

ஏனெனில், இது சாதாரண சிப்பாய்களுக்காக வைக்கப்பட்ட கண்ணியல்ல.

படையெடுப்பை முன்னின்று வழிநடாத்த இருக்கும் முக்கிய உயர் அதிகாரிகளை இலக்காகக் கொண்டு, வைக்கப்பட்ட கண்ணி ஆகும்.



வீரவேங்கை – தமிழன்
(சிவராஜா புவனேந்திரன்)
வேலணை.

இவ்விதம் ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து கண்ணியைப் புதைக்க முன்னர், இதற்கான பணியில் ஈடுபட்ட ஐந்து போராளிகளை நாங்கள் இழந்துள்ளோம். இவர்கள் வெவ்வேறு சம்பவங்களில், வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு நாட்களில் வீரச்சாவை அணைத்தனர்.

எல்லாளன், புனிதன் ஆகிய போராளிகள் 22-4-92 அன்று வேலணையிலும், தமிழன் என்ற போராளி 29-05-92 அன்று அராலி வெளியிலும், 2-வது லெப். செம்பியன், 2-வது லெப். அறிவழகன் ஆகிய போராளிகள் 15-6-92 அன்று ஊர்காவற்துறையிலும் வீரச்சாவடைந்தனர்.



2–வதுலெப். செம்பியன், சுபாஸ்
(பிரான்சிஸ் றொபின்சன்)
புங்குடுதீவு.

துணிகரமான இந்த இரகசியப் பணியின்போது எதிரியின் கண்களில்பட்டு துப்பாக்கிக் குண்டேந்தியும், சயனைட் அருந்தியும் எதிரி



2–வது லெப். அறிவழகன்
(ஜோசப் வின்சன்ட்)
இலந்தமோட்டை, மன்னார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழவேரோடிய..

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

"நாங்கள் ஏமாற்றப்பட்டோம், ஏமாற்றப்பட்டோம்'' எனத் தமிழ்த் தலைவர்கள் எம் மக்களிடம் வந்து அழுவதைத் தான், நாம் கண்டிருக்கிறோம்.

முதன் முதலில் ஒரு சிங்களத் தலைவன் ''நாம் ஏமாற்றப்பட்டோம்'' எனக் கூக்குரலிடுவது, எம்மோடு பேசிய பின்புதான்.

நாம் ஏமாறவில்லை; ஏமாறத் தயாராக இருக்கவில்லை என்பது தான் உண்மையாகும்.

இக் கட்டுரையின் நோக்கம் ஒவ்வொரு கட்டப் பேச்சுவார்த்தைகளையும், அதற்கான சூழலையும் விரிவாக ஆராய்வதல்ல.

இப்பேச்சுவார்த்தைகளில் காணப்படும் பொதுவான சில பண்புகளை இனங்காட்ட முயல்வதே ஆகும்.

எல்லாப் பேச்சுவார்த்தைகளின் போதும், அப்பேச்சுவார்த்தைகளின் பின்னால் ஒவ்வொரு நாடும் தங்கள் நலன் கருதியே செயற்படுகின்றது என்பதை நாடகங்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் மூலம் எப்போதும் மக்களுக்கு எடுத்துக்கூறிவந்தோம்.

மக்களை என்றும் பிழையாக வழிநடத்தவில்லை.

உதாரணமாக இந்திய அரசு குறித்தும், தேசத் துரோக அமைப்புக்கள் குறித்தும், எம் கருத்துக்களை தமிழீழ மண்ணின் அறிஞர்கள் எனச் சொல்லப்படுவோர் எல்லோரும் ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

ஏற்றுக்கொள்ள மறுத்தனர் என்பதை விட நம்ப மறுத்தனர் என்றே சொல்லலாம்.

நேரடியான பட்டறிவுகளினூடாக அதை அறிந்த பின்பே, நாம் என்றோ சொன்னவைகளைப் புரிந்து கொண்டனர்.

எம்மீது அழுத்தங்கள் போடப்படும் போதெல்லாம், எம் இலட்சியத்தைப் பாதிக்காத வகையில் விட்டுக்கொடுத்து இணக்கம் காணும் தன்மையை, நாங்கள் கொண்டிருந்தோம்.

இதனைச் சிலர் விட்டுக்கொடுப்பு என்று சொன்னதும் உண்டு. இவை விட்டுக்கொடுப்புகள் அல்ல - தேவையற்று உறவுகளைப் பகைக்க வேண்டாம் என்ற நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஆகும்.

இதைப் புரிந்துகொள்ளாமல் எம் இலட்சியத்தைப் பாதிக்கும் வகையில் நடக்க முற்பட்டவர்களோடு, எவ்வளவு பெரிய இழப்புக்களைச் சந்தித்தாலும் நாம் போராட ஆயத்தமாக இருந்தோம்.

உயிருக்குப் பயந்து விடுதலையை விலை பேச, என்றுமே நாம் தயாராக இருந்ததில்லை.

இப்படியான பொதுவான பண்புகளை எடுத்துக் காட்டுவதே, இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இப்படியான பண்புகளை இனங்காணும்போது, இவற்றின் பின்னால் மறைந்து இருக்கும் வேறு சில பண்புகளையும் அடையாளம் காணாமல், எம் போராட்ட வரலாற்றின் வளர்ச்சியைச் சரியாக அறிய முடியாது.

1) எவ்வளவு கொடுமைகள், அழிவுகளைச் சந்தித்த போதும், நீதியான போராட்டத்தின் பின்னால் உறுதியாக நிற்கும் 'தமிழ் மக்கள்.
2) உலக அரசியலில் சூழ்ச்சியாளர்களை விஞ்சும் சூழ்ச்சியாளர்களாகச் செயற்படும் அதேவேளை, எங்கள் மண்ணுக்கும் 'மக்களுக்கும் உண்மையாகத், தன்னலமற்றுக் கட்டுக்கோப்புடன் உழைக்கும் விடுதலை அமைப்பு.
3) எம் நாட்டின் விடுதலைக்காக, உயிரைத் தற்கொடையாக எந்நேரமும் தரத் தயாராக இருக்கும் தலைமையும், போராளிகளும்.
4) 4500 க்கு மேற்பட்ட போராளிகளும் 30, 000 க்கு மேற்பட்ட மக்களும் சிந்திய குருதியில் பிணைந்து நிற்கும் உணர்வுகள்.

இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால், எம் தேசத்தின் வெற்றிக்குப் பின்னாலுள்ள உயிர்த்துடிப்பை, எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

### குறிப்புகள்

1. 18. 6. 1985 - சிறீலங்கா போர் 'நிறுத்தம் செய்ய இணங்கியது.
2. 08. 7. 1985 - திம்புவில் சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை தொடங்கியது.
3. 12. 8. 1985 - திம்புவில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை தொடங்கியது.
4. 20. 8. 1985 - தலைவர் பிரபாகரன் தலைமறைவானார்
5. 22. 8. 1985 - திம்பு பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டதாக இந்திய அரசு அறிவித்தது.
6. 23. 8. 1985 - திரு. அன்ரன் பாலசிங்கம் 48 மணிநேரத்துள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என, இந்திய அரசு உத்தரவிட்டது.
7. 13. 7. 1986 - தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தக் கொழும்பு சென்றது.
8. 06. 11. 1986 - சூளைமேட்டில் ஈ. பி. ஆர். எல். எவ். தேசத்துரோகிகளால்,பொது மகன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.
9. 08. 11. 1986 - ஆயுதக் களைவு என்னும் பெயரில் ஆயுதங்கள் பெறப்பட்டது.
10. 17. 11. 1986 - பெங்களூரில் பேச்சுவார்த்தை நடந்தது.
11. 22. 11. 1986 - தொலைத்தொடர்புக் கருவிகள் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தலைவரின் உண்ணா நோன்பு தொடங்கியது
12. 23. 11. 1986 - தொலைத்தொடர்புக் கருவிகள் மீளத் தரப்பட்டதை அடுத்து, உண்ணா நோன்பு முடிவுற்றது.
13. 05. 1 1987 - தலைவர் பிரபாகரன் தமிழீழம் திரும்பினார்
14. 29 7. 1987 - இந்திய சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
15. 10. 10. 1987 - தமிழீழ இந்தியப் போர் தொடங்கியது.

✻

# ஆழ வேரோடிய ஆலமரமும்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம், பல பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றி இருக்கின்றோம்.

வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்த பேச்சுவார்த்தைகள் சிலவற்றை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்ப்பது, நாளைய தலைமுறைக்கு விழிகாட்டலாக இருக்கும்.

திம்பு, டெல்லி, பெங்களூர், கொழும்பு, யாழ்ப்பாணம் என இப் பேச்சுவார்த்தைகள் நடந்தன.

மிகப்பெரிய அழுத்தங்கள், சூழ்ச்சிகள் இவற்றிற்கூடாக எம் இலட்சியத்தை விட்டுக் கொடுக்காமலும், அதேவேளை மக்களையும் இது குறித்த விழிப்புணர்வுகளுடன் எம்மைப் புரிந்துகொண்டு எமக்குச் சார்பாக நிற்கவைத்துக் கொண்டு, பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றினோம்.

பலமுள்ளவனுக்குப் பயந்துஅவன் சொல்வதற்கு இணங்கி, அதன் பின் அந்த இணக்கத்திற்குக் காரணத்தைத் தேடி மக்களை ஏமாற்றுவது, ஒருவகைப் பேச்சுவார்த்தையாகும்.

நம்பி, ஏமாந்து, கூட நின்றவர்களை (மக்களை) யும் ஏமாற வைத்து அழிவின் பின் விழித்துக் கொள்வது, இன்னுமொருவகைப் பேச்சுவார்த்தையாகும்.

தனிப்பட்ட நலன், பதவிகளுக்காக எல்லோரையும் ஏமாற்றியும், தம் நலன்களை மட்டும் பார்ப்பதும் ஒருவகைப் பேச்சுவார்த்தையாகும்.

இப்படியான பேச்சுவார்த்தைகளுக்கே இந்தியாவும், சிறீலங்காவும் பழக்கப்பட்டிருந்தன.

ஓரளவு அழுத்தத்தைப் பொறுப்பவர்களை, அது அளவு மீறுகின்ற போது நாம் அழிந்தாலும் அடிபணிய மாட்டோம் என எழுந்து நிற்பவர்களை, நம்பி ஏமாற ஆயத்தமில்லாதவர்களை, தங்கள் தனிப்பட்ட நலனில் நாட்டம் இல்லாதவர்களை, தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்கும் வரை இந்தியாவோ சிறீலங்காவோ சந்தித்ததில்லை.

1985 இல் சிறீலங்கா அரசு, நாம் இங்கு தொடர்ந்து நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து, தன் இராணுவத்தைப் பலப்படுத்த எண்ணியது.

அதற்காகப் பேச்சுவார்த்தை என நாடகம் ஆடியது.

நாம் சிறீலங்கா அரசின் சூழ்ச்சியை விளக்கமாக எடுத்துச் சொல்லியும், ராஜீவ்காந்தியால் சிறீலங்காவைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்தியாவின் பூகோள நலன் மட்டுமே இந்திய அரசின் நோக்கம். சிறீலங்கா இந்திய உதவியை நாடியதும், தன் நலனை முழுமை செய்யும் நேரம் வந்துவிட்டது என இந்திய அரசு எண்ணியது.

எம்மை ஏதோ வகையில் கைகழுவிவிட எண்ணியது.

பூட்டான் தலைநகர் 'திம்பு'வில் நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு 'வா' என அழுத்தம் போடப்பட்டது.

முதலில் பேச மறுத்த நாம், இந்த அழுத்தத்தைப் பொறுத்துக் கொண்டு பேசச் சென்றோம்.

அழுத்தம் எல்லை மீறாதவரை பேசலாம் என்பது மட்டும் நோக்கமல்ல: இப்பேச்சுவார்த்தையில் வேறுசில விடயங்களும் எமக்குச் சாதகமாக அமைந்தன.

1) தலைமறைவு இயக்கமாக இருந்த நாங்கள், தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை.

2) பயங்கரவாதிகள், கொலைகாரர் என எம்மைச் சொன்ன சிறீலங்கா அரசு, எம்மோடு பேச நிர்ப்பந்திக்கப்பட்டமை.

3) எமது போராட்டம் பற்றியும், எமது கோரிக்கைகளைப் பற்றியும் உலகம் முழுவதும் வெளிப்படையாகச் சொல்ல, ஒரு தளம் கிடைத்தமை.

சிக்கலைத் தீர்க்கும் நோக்கம் சிறீலங்காவுக்கு இருக்கவில்லை. இராணுவத்தைப் பலப்படுத்த நேரம் அதற்குத் தேவைப்பட்டது.

சிறீலங்கா சற்றும் நியாயமற்ற தீர்வையே வைத்தது. அதேவேளை, நாங்கள் சிறீலங்காவின் நியாயமற்ற தன்மையைத் தெளிவாக எடுத்துக்காட்டி நின்றோம்.

இந்திய அரசின் நலன்களைச் சிறீலங்கா பேண மறுத்தது.

இந்தியா இரண்டு விடயங்களைப் புரிந்து கொண்டது.


1) சிறீலங்காவுக்கு இன்னும் நெருக்கடி கொடுக்க வேண்டும்.

2) தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும்வரை, தன் எண்ணம்போல் தமிழீழப் போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும்; அல்லது அழிக்க வேண்டும்.

இது இந்திய அரசுடன் எமக்கு வெளிப்படையாக ஏற்பட்ட முதல் தெறிப்பாகும்.

இந்திய அரசு எமக்குப் பாடம் புகட்ட எண்ணியது.



கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, தலைவரின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் திரு. வீரமணி (இடது) அவர்களால் முடித்துவைக்கப்பட்டபின் செய்தியாளர்களிடம் பேசும் தலைவர்.

"நீரின்றி, உணவின்றி சாகும் வரை உண்ணா நோன்பு இருக்கத் தொடங்கிவிட்டேன். எனது கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள்." இந்திய அரசு நிலை குலைந்தது.

பேச்சுவார்த்தையில் நேரடியாக ஈடுபடாத பாலா அண்ணாவையும், (திரு. அன்ரன் பாலசிங்கத்தையும்) சந்திரகாசனையும், பேச்சுவார்த்தையில் நேரடியாகக் கலந்து கொண்ட சத்தியேந்திராவையும் நாடு கடத்தியது.

எங்களுக்குப் பாடம் படிப்பித்து விட்டதாகஇந்திய அரசுமகிழ்ந்தது. மீண்டும் எம்மை டெல்லிக்குப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது.

தலைவர் பிரபாகரன் தலைமறைவானதால், ராஜீவ் விரும்பியவண்ணம்பேச்சுவார்த்தைகளைத் தொடங்க முடியவில்லை.

இந்திய அரசுக்கு நேரடியாக எமது பலத்தைக் காட்டிய முதல் நிகழ்ச்சி அது.

ராஜீவ் இந் நிகழ்ச்சியை என்றும் மறந்திருக்கமாட்டார்.

காலம் தாமதித்து, நாம் விரும்பிய நேரமே, தலைவர் பிரபாகரன் தலைமறைவு வாழ்க்கையில் இருந்து வெளியே வந்தார். அதன் பின்பே பேச்சுவார்த்தை தொடங்கியது.

டெல்லியில் மீண்டும் ஒரு பலப் பரீட்சை.

போர்நிறுத்தம், தீர்வுத்திட்டம் என்றெல்லாம் பேசப்பட்ட போதும் நாம் பல தடவைகளில் கருத்துத் தெரிவிக்க மறுத்தோம்.

எமது அரசியல் ஆலோசகர் பாலா அண்ணா இல்லாமல் எம்மால் கருத்துத் தெரிவிக்க இயலாது எனக் கூறிவந்தோம்.

நடைமுறைச் சிக்கலில் இருந்து இந்தியா விடுபட விரும்பியது. பாலா அண்ணா மீண்டும் இந்தியா திரும்ப ஒப்புதல் தரப்பட்டது.

இது எமக்குக் கிடைத்த இன்னுமொரு வெற்றி.

ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற அமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும் வரை, இக்கூட்டில் இல்லாத 'புளொட்' குழுவைத்தவிர மற்றையோரைத் தம் விருப்பப்படி நடக்கச் செய்ய முடியாது என்பதை, இந்திய அரசு உணர்ந்துகொண்டது.

இந்திய அரசு மற்றையக் குழுக்களை, மறைமுகமாக எங்களுக்கு எதிராக வளர்த்தது.

நாம் தமிழீழத்தில் சிறீலங்கா இராணுவத்தோடு மோதிக் கொண்டு இருந்தோம்.

அதேவேளை ஈழத் தேசிய விடுதலை முன்னணிக் கூட்டில் இருந்த மற்றக் குழுக்கள், இந்தக் கூட்டிற்கு விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட மதிப்பைப் பயன்படுத்தித், தம்மை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டன.

யாரும் சிறீலங்கா இராணுவத்திற்கு எதிராகப் போராட, ஆயத்தமாக இல்லை.

வெளிநாடுகளில் பணம் சேர்க்க முற்பட்டார்கள். இந்திய அரசின் துணையோடு, எமக்கெதிராகச் செயற்பட ஆயுதங்களைப் பெற்றனர்.

மறைமுகமாகவும், பலவேளைகளில் வெளிப்படையாகவும் எம் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தினார்கள். வழமைபோல் நாம் நம்பி ஏமாறத் தயாராக இருக்கவில்லை.

சரியான காலத்தில் இவர்களின் துரோகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுத்தோம்.

இந்திய அரசு எம்மை ஓரங்கட்டிவிட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியை மீண்டும் பயன்படுத்த எண்ணியது.

இந்தியா சொன்னபடி நடப்பவர்கள் அவர்கள்.

இருந்தாலும் கூட்டணியினர் எல்லோரின கருத்துக்களையும் கேட்டு அதன்படி நடப்பவர்கள் போல, ஒரு நாடகம் ஆடினார்கள். தங்களைக் காத்துக் கொள்ள விரும்பி ஆடிய நாடகம் அது. எனவே கொழும்பு செல்லமுதல் எம்மோடு கூட்டணியினர் பேச விரும்பினார்கள்.

கூட்டணியினரின் துரோகத்தனம் எமக்குப் புதியதல்ல; இருந்தும் அவர்களோடு பேசினோம்.

கொழும்பு சென்று 'சமஷ்டி' அமைப்பு ஒன்றைத் தீர்வாக வைக்கச் சொன்னோம். சிறீலங்கா அரசு அதை ஏற்காது; அதையே காரணம் காட்டி, சிறீலங்கா அரசு சிக்கலைத் தீர்க்க விரும்பவில்லை-

எனவே தமிழீழம் தவிர வேறு வழியில்லை எனக் கூறி, எம் போராட்டத்திற்குச் சார்பாக நில்லுங்கள் என்றோம்.

எதையும் விட்டுக் கொடுக்காமல் பேசுவது என்பது கூட்டணியின் மரபல்ல. எதை எதை விட்டுக் கொடுக்கலாம் எனப் பேசுவதே அவர்கள் மரபு.

அம்பாறை, சேருவில தேர்தல் தொகுதிகளை விட்டுக் கொடுப்பது பற்றிப் பேசினார்கள். சிறீலங்கா அரசு, கூட்டணியினரின் இவ்வளவு விட்டுக் கொடுப்புகளுக்குப் பின்பும் இணக்கம் காண மறுத்தது.

தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை சிறீலங்கா அரசு ஏற்க மறுத்தது.

சிறீலங்கா அரசும் கூட்டணியும் இணக்கம் காணும் ஒரு தீர்வை எம்மீது திணிக்கவே, இந்தியா விரும்பியது.

கூட்டணி இந்திய அரசு விரும்பிய வண்ணம் நடக்க விரும்பிய போதும், எம்மைக் கண்டு அஞ்சியது.

பெங்களூரில் 'சார்க்' மாநாடு நடக்க இருந்தது. ஜே ஆர். புதிய தீர்வு ஒன்றை முன்வைத்தார்.

வடக்கு ஒரு மாகாணமாக இருக்கும்; கிழக்கு மூன்றாகப் பிரிக்கப் படும். திருக்கோணமலை சிங்கள மாவட்டமாகும். மட்டக்களப்பு தமிழர் மாவட்டமாகும். அம்பாறை முஸ்லிம்களின் மாவட்டமாகும்.

இத்திட்டத்தில் தாயகக் கோட்பாடு மறுக்கப்பட்டது மட்டுமல்ல, திருக்கோணமலையும் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டது.

ஜே ஆரின் பாதுகாப்பு என்ற பெயரிலும், சூளைமேட்டில் பொது மக்கள் மீது 'ஈ பி. ஆர். எல். எவ்.' நடத்திய துப்பாக்கிச் சூடுகளால் பொதுமக்களில் ஒருவர் கொல்லப் பட்டதைச் சாக்காகக் கொண்டும், எல்லோரிடமும் 'ஆயுதக் களைவு-

# அசைக்க முனைந்த புயல்களும்

என்ற பெயரில் ஆயுதங்கள் எடுக்கப்பட்டன.

தீர்வை ஏற்கப் போடப்பட்ட அழுத்தம் அது.

பெங்களூரில் வழமையான மிரட்டல்கள், அழுத்தங்கள்.

நாம் ஓரளவு அழுத்தத்தைப் பொறுப்போம்; அதற்கு மேல் எதிர்ப்போம்.

''வடமாகாணத்திற்கு உங்களை முதலமைச்சர் ஆக்குகிறோம்'' என்றது இந்திய அரசு.

''நான் இப்போதும் வடமாகாணத்திற்கு முதலமைச்சராகத்தான் இருக்கிறேன்'' என்றார், தலைவர் பிரபாகரன்.

போட்ட அழுத்தம் போதாது; இன்னும் அழுத்தம் போடவேண்டும் - ''பறியுங்கள் தொலைத் தொடர்பை'' என, எம்தொலைத் தொடர்புக் கருவிகளை இந்திய அரசு பறித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் காலில்விழும் நாட்களை, இந்திய அரசு எண்ணத் தொடங்கியது.

காலில் வந்து விழும் விடுதலைப் புலிகளைப் பார்த்துக் காத்திருந்த இந்திய அரசின் காதில் அறை விழுந்தது போல, விடுதலைப் புலிகளின் செய்தி வந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர், தன்னுயிரைத் தற்கொலை செய்ய முடிவு செய்துவிட்டார் என்பதே அச்செய்தியாகும்.

''நீரின்றி, உணவின்றிச் சாகும் வரை உண்ணாநோன்பு இருக்கத் தொடங்கிவிட்டேன்.

தொலைத் தொடர்புக் கருவிகளை ஒப்படையுங்கள்:

இல்லையேல்,

என்னை என் தாய்நாடு செல்லவிடுங்கள். இதுதான் என் கோரிக்கை. ஏதாவது ஒன்றை நிறைவேற்றும் வரை உண்ணாநோன்பு தொடரும்.''

தமிழீழப் போராட்டத்தையும் தலைவர் பிரபாகரனையும் நேசித்த எம். ஜி. ஆரால், எதுவும் செய்ய முடியாமல் இருந்தது.

ஆனால், தம் ஆட்சியில் தமிழீழத்தின் தலைவர் சாவதை எம். ஜி. ஆரால் பொறுக்க முடியவில்லை.

உடனடியாகத் தொலைத் தொடர்புக் கருவிகளைத் திருப்பித் தரும்படி கட்டளை இட்டார்.

இந்திய நடுவன் அரசு நிலை குலைந்தது.

இது தமிழீழப் போராட்டத்திற்குக் கிடைத்தஇன்னுமொரு வெற்றியாகும்.

இந்தியா, விடுதலைப் புலிகளை ஓரளவு புரிந்துகொண்டுவிட்டது.

இவர்கள் அசாதாரண மிரட்டல்கள். அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்பதே அந்தப் புரிந்துணர்வு.

எங்களைப் படைபலம் கொண்டே பணியவைக்கலாம் என, இந்திய அரசு முடிவெடுத்தது.

'இந்தியப் படைபலத்தை எதிர்க்க தென்னாசியாவிலே எந்த நாட்டிற்கும் துணிவில்லை. விடுதலைப் புலிகள் எதிர்க்கப்போவதில்லை; எதிர்த்தால்இருக்கப்போவதில்லை' என, இந்தியா கணிப்பீடு செய்தது.

காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

'' ராஜீவைச் சந்திக்க வாருங்கள் '' என எம்மை அழைத்துச் சென்றார்கள்.

'' ஒப்பந்தம் ஒன்று செய்யப் போகின்றோம் ; நீங்கள் இதில் எதையும் மாற்ற முடியாது ''

'' ஒப்பந்த நகலைத் தரமாட்டோம்; வாசிக்கின்றோம் '' என்றார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தது போல, நாம் எம் எதிர்ப்பைக் காட்டினோம்.

எல்லோரும் முயன்றும் நாம் இணங்க மறுத்தோம்.

கடைசியில் ராஜீவ் காந்தி எம்மைச் சந்தித்து, எம்மை அமைதிப்படுத்தி எம் இணக்கத்தைப் பெற முயன்றார்.



யாழ்ப்பாணத்தில் இந்தியப் படை அதிகாரிகள், இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்சிற் ஆகியோருடன் தலைவர் பிரபாகரன். அருகில் திரு. அன்ரன் பாலசிங்கம்.

வடமராட்சியில் நடைபெற்ற 'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணியது.

வடமராட்சிப் பகுதி எமது கட்டுப்பாட்டில் இருந்து விடுபடுவதைப் பார்த்துக் கொண்டு, பேசாமல் இருந்தது.

பெருமளவில் மக்கள் கொல்லப்பட்டார்கள்; பெருமளவில் அழிவு நடந்தது.

வலிகாமத்தின்மீது சிறீலங்கா அரச படை எடுக்கக் கூடாது என, இந்திய அரசு கூறியது.

வானில் இருந்து ஒரு சில உணவுப் பொட்டலங்களைப் போட்டது.

1) புலிகளால் தமிழ் மக்களைப் பாதுகாக்க முடியாது என்ற உணர்வைத் தோற்றுவிக்க முயன்றது.

அந்தச் சந்திப்பின்போது எம் நோக்கம், இலட்சியம் பாதிப்புறாத வகையில் இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் எம்மக்களின் வேணவாக்களை நிறைவு செய்யும் வரை, அதனை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பதாகக் கூறினோம்.

''அமைதிப் படை'' என்றஇந்திய அரசின் முகமூடியைக் கிழிக்க நேரம் தேவைப்பட்டது. வந்தவர்கள் தேவதூதுவர்கள் அல்ல என்பதை எடுத்துக் காட்ட வேண்டிய தேவை இருந்தது.

'தாங்கிகள்', உலங்கு வானூர்திகள் எனப் படைக்கலன்கள் குவிக்கப்பட்டன.

'புளொட்', 'ஈ. பி. ஆர். எல். எவ்.', 'ரெலோ' குழுக்களில்இருந்து பிரிந்தவர்களைக் கொண்டு 'ஈ. என். டி. எல். எவ்.' என்ற, புதிய தேச விரோதக் குழு ஒன்றும் இந்தியாவால் உருவாக்கப்பட்டது.

தேசத்துரோகிகள் குவிக்கப்பட்டார்கள்; படை பலம் குவிக்கப்பட்டது.

தமிழ் மக்களும் புலிகளும் பயந்திருப்பார்கள் என எண்ணிய இந்திய அரசுக்கு, இங்கு காட்டப்பட்ட எதிர்ப்பு ஆத்திரத்தைக் கிளப்பியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆயுதபலம்மூலம் பாடம் புகட்டவேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை நோக்கித் துப்பாக்கியால் சுடுவார்கள் என, இந்தியப் படையோ, இந்திய அரசோ எதிர்பார்க்கவில்லை.

காலடியில் விழுவோம் என எதிர்பார்த்திருந்த இந்திய அரசபடை, கால் வைத்த இடமெல்லாம் நாம் குண்டுகளால் வரவேற்புக் கொடுத்தோம்.

30. 7. 87 இல் வந்த 'வன்கவர்வுப்படை' 24. 3. 90 இல் - முப்பத்திரண்டு திங்களின் பின் - தமிழீழ மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டது.

தமிழீழ மண், வரலாற்றில் சந்தித்த மாபெரும் வெற்றி இது.

இந்தியப்படை இங்கிருந்து செல்லாமல் நிலைகொள்ளப் போகின்றது என்பதை, பிரேமதாசா உணர்ந்தார்.

ஜே. வி. பியின் இந்திய எதிர்ப்பு என்ற பெயரிலான அரசுக்கு எதிரான போராட்டத்தைத் தடுக்க வேண்டிய தேவையையும், பிரேமதாசா உணர்ந்தார்.

அது மட்டுமல்லாமல், சிறீலங்காவுக்குள் குழப்பங்களை இந்திய அரசு தமிழீழத்தில் இருந்து கொண்டு உருவாக்கமுயல்வதையும், தெரிந்துகொண்டார்.

இந்தியப்படை வெளியேற வேண்டும் - யார் துணை இருந்தால் இதைச் செய்யலாம் என நினைத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச அழைத்தார்.

சிறீலங்கா அரசோடு என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் பேசமாட்டார்கள் என்பது, இந்தியாவின் முடிந்த முடிவு.

அரசியல், இராணுவ சதுரங்க ஆட்டம் எமக்குப் புதியதல்ல. எனவே புதியதோர் சதுரங்க ஆட்டம் தொடங்கியது.

போர் நிறுத்தம் கேட்போம்; எப்படியும் காப்பாற்றுங்கள் எனக் கேட்போம்; தாங்கள் சொல்லும் பல விடயங்களுக்கு இணங்குவோம் எனச், சிறீலங்கா அரசு எதிர்பார்த்திருக்கலாம்.

நாம் போர் நிறுத்தம் கேட்கவில்லை; காப்பாற்றுங்கள் என இறைஞ்சவில்லை.

எங்கள் இலட்சியத்திற்கு இடையூறான எதையும் ஏற்றுக்கொள்ளவுமில்லை.

நாம் கூட இருக்கும் துணிவில் ''இந்தியனே வெளியேறு'' எனப் பிரேமதாசா முழங்கினார்.

அதேவேளை தான் விரும்பிய வண்ணம் எதையும் எம்மோடு செயற்படுத்த முடியாது என்பதையும் உணர்ந்தார். ஒரு புறம் இந்தியப்படை வெளியேறியது: மறுபுறம் எம்பலத்தை அழிக்கும் திட்டங்கள் தொடர்ந்தன.

1) குடியேற்றங்கள் தொடர்ந்தன.

2) இந்தியத் தலையீட்டுக் காலங்களிலிருந்து கிடைத்த போர் அற்ற சூழ்நிலை, அதன் மூலம் கிடைத்த பணம் இவைமூலம் சிறீலங்காப்படை பெருமளவில் பயிற்சி அளிக்கப்பட்டு, படைக்கலன்கள் வாங்கப்பட்டு, சிறந்த படை அணியாக மாற்றப்பட்டு வந்தது

3) தேசவிரோதக் குழுக்களை எமக்கு எதிராகப் பயன்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

4) எங்கள் தனித்தன்மையைச் செயலிழக்கச் செய்யும் வகையில், அனைத்துக் கட்சி மாநாடு தொடங்கப்பட்டது. 10. 6. 90 இல் மீண்டும் தமிழீழ - சிறீலங்காப் போர் வெடித்தது.

'' தமிழீழ விடுதலைப் புலிகள் எம்மை ஏமாற்றி விட்டார்கள் '' எனப், பிரேமதாசா கூக்குரலிட்டார்.

40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அரசியலில், தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டதே வரலாறு.

(3ஆம் பக்கம் பார்க்க)

இக் கட்டுரை, எம்மால் வெளியிடப்பட்ட முத்தமிழ் விழா (1992) மலரில் திரு. யோகரத்தினம் யோகி அவர்களால் எழுதப்பட்டது.

இந்திய நடுவன் அரசு அடுத்த மிகப்பெரிய அழுத்தம் குறித்து முடிவுகட்டு முன்னரே, இந்திய மண்ணில் ஒரு சிலரை விட்டுவிட்டு தலைவர் உட்பட எல்லோரும் தமிழீழம் வந்தோம்.

'' பிரபாகரன் தமிழீழம் சென்றுவிட்டார் '' என நான் 'இந்து' பத்திரிகையின் இணை ஆசிரியராக இருந்த ராமிடம் கூறியபோது, அவர் கூறிய பதில் '' இந்தியாவின் பிடி நழுவிவிட்டது '' என்பது தான்.

2) தன்னால்தான் தாக்குதல் நிறுத்தப்பட்டது; தான்தான் தமிழ் மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றியது என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது.

தனக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவித்துவிட்டதாக எண்ணியது; புலிகளை மக்கள் இனி நம்பமாட்டார்கள் என நம்பியது.

தனது நேரடித் தலையீட்டுக்கான தக்க நேரம் வந்துவிட்டதென மகிழ்ச்சி அடைந்தது.

# உறுதியின் உறைவிடம்

அன்றைய நாள் தமிழீழத்திற்கு துயரம் தரும் நாளாய் விடிந்தது. அன்று காலைதான் ராஜன் எம்மைவிட்டுப் பிரிந்தான்.

முதல்நாள் மாலை, பண்டத்தரிப்பில் நின்ற போராளிகளைப் பார்க்கவந்த ராஜனிடம், எதிரியின் சிறியபடையணி ஒன்றின்மீதான சிறிய தாக்குதல் திட்டம் ஒன்றைக் கூறினர் கோபியும் தோழர்களும்.

எதிரியின் புதிய நிலஆக்கிரமிப்புக் கண்டு குமுறிக்கொண்டிருந்த ராஜன், உடனடியாக ஒப்புதல் தந்துவிட, சிறிதாய்த் திட்டமிடப்பட்டிருந்த அந்தத் தாக்குதலுக்கான ஒழுங்குகள் இரவோடிரவாக நடந்துமுடிந்தன.

திட்டம் மிகவும் சிறியதாகவும் சுலபமானதாகவும் எதிர்பார்க்கப்பட்டதால், திட்டம்பற்றி அதில் நின்றவர்களைத்தவிர வேறு எவருக்குமே, எதுவுமே தெரியாது போய்விட்டது.

திட்டத்தின் வெற்றிபற்றிய வோக்கிச் செய்தியை எதிர்பார்த்தபடி காத்திருந்தான் ராஜன்.

கிளைமோர் சத்தம் கேட்டவுடன் கோபி... கோபி...... என்று கூப்பிட்டும் தொடர்பில்லாமல்போக,

'ராஜன் வழமையான ராஜனாய்' மாறிப்போனான். தலையில் காயத்துடன் கோபியைக் கண்டதும் அவன் வழமையான ராஜனாய் மாறிப்போனான்.

என்ன நடந்ததோ? இரவு கிளைமோர் வைத்தவர்கள் கவனமின்றி நிற்க எதிரி கண்டானோ? இல்லை எம்மவர் ஏதேனும் வோக்கியில் மாறிக் கதைத்து விட்டனரோ? வேவு பார்த்தோர் தவறோ? வேறு பிழைகளோ?

கோபியின் அணியைச்சூழ்ந்து எதிரிகள்.- தனி ஆளாய் உள்ளேபுகுந்த ராஜன், எலலோரையும் பின்னுக்கு அனுப்பி நின்று அடிபட்டு...... அவன் வரவில்லை.

கணேஸ், கிங்ஸ்லி என்று எட்டுப் பேருடன் ஒன்பதாவது ஆளாய் ராஜனும் வரவில்லை.

ராஜன் இல்லை என்ற செய்தி மெல்லப்பரவ அதிர்ந்து துடித்தது தமிழீழம்.

அவன்மீது கொள்ளை அன்பை வைத்திருந்த தலைவர், உயிராய்ப் பழகிய நண்பர்கள், அவனால் உருவான போராளிகள், அவனைக் காத்த மக்கள் என்று தமிழீழம் அழுது துடித்தது.

ராஜன் - றோமியோ நவம்பர்.

எங்கள்போராளிகளின் மனதில் நிறைந்துவிட்ட இனியபுயல், இறுகிய பாறை.

அடிக்கடி ரவைகளால் தைக்கப்பட்டு, பிய்பட்டு, ரத்தம் கொட்டி, தழும்புகளால் நிறைந்த தேகம்.

அவனது மனம்மட்டும் தளரவில்லை; அது இறுகிப் பாறையாய் உருவாகியிருந்தது.

1987இன் ஆரம்ப ஆண்டு, ஓர் இருண்ட பொழுது. யாழ். பொலிஸ் விடுதியும, தொலைத்தொடர்புக் கட்டிடமும் கோட்டைக்குத் துணையாய் நிமிர்ந்து நின்றன.

அதைநோக்கி இருளோடு இருளாய் நகரும் புலிவீரர்கள்.
அதில் ஒருவனாய் ராஜன்.
தன்கை ஆயுதத்தைத் தான் பார்க்கமுடியாத காரிருள்.
பின்னால் நிற்பவரின் மூச்சுச் சுடும்.
வியர்வையால் குளிக்கும் தேகம்.
தாகம் தண்ணீருக்காய் மட்டுமல்ல, அதற்கும் மேலாய், உயர்வாய்.
தாகம் தணிக்க உயிர்கொடுக்கத் தயங்காத வேகம், உறுதி.
இது எம் தாயகம். எங்கள் பூமி.
இங்கு அந்நியனுக்கு என்னவேலை?
இன்று வெல்வோம்.
அந்நியன் பாடம்படிப்பான்.

அக்காலத்தில் அவன் கரைநகர் கடற்படைக் காவலரண் பொறுப்பாளன். அதற்கு முந்தைய சண்டையிலெல்லாம் தன் முத்திரையை ஆழமாய்ப் பதித்திருந்தான். கிட்டண்ணை அவனைக் கவனித்து வைத்திருந்தார். இந்தச் சண்டைக்கென ராஜன் கிட்டண்ணையால் விசேடமாக அழைக்கப்பட்டிருந்தான். ராதா அண்ணை தலைமையில் உள் நுழைந்த குழுவில் ராஜனும்.

உள் நுழைவோருக்கு குறுகியதாயும் வெளியில் நிற்போருக்கு நீண்டதாயும் அமைந்த இரவு விடிந்தபோது......

தனது படை வீரர்களை ''யாழ்ப்பாணக் காடுகளில்'' தேடிக்கொண்டிருந்தது சிறிலங்கா அரசு.

யாழ்ப்பாணத்தில் காடுகளைத் தேடிக் கொண்டிருந்தது உலகு.

தன் நண்பர்கள் சிலரையும் தன் கைவிரல்கள் இரண்டையும் இழந்தபின், மருத்துவமனையில் இருந்து,அந்தச் சண்டையில் தனது அனுபவத்தை மீட்டுக்கொண்டிருந்தான் ராஜன்.


இந்திய இராணுவக் காலம், அந்த இரும்பை உருக்காக உருவாக்கிய நாட்கள்.

இந்தியக் காலத்தில் ராஜனின் நாட்கள் வீரம் செறிந்த நாட்கள். அவன் நின்றுபிடித்தது வெறும் அதிர்ஷ்டத்தினால் மட்டுமல்ல. வீரம், விவேகம், அவதானம், அன்புக்கினிய எம்மக்களின் பாசம்- இவைதான் அவனைக் காப்பாற்றிய கவசங்கள். தொடர்ச்சியான முற்றுகைகள்- தொடர்ந்து தூக்கமற்ற இரவுகள்.

முற்றுகை ஒன்றிலிருந்து பாய்ந்தோடித்தப்பி வந்த நாளின் மறுநாட்காலை, ஒரு வாரக் கசகசப்புதீரக் குளித்துவிட்டு நொண்டிக்கொண்டு வந்தான். அன்புத்தோழனின் மடியில் ஈரம் ஊறிய காலை முள்ளெடுக்கக் கொடுத்துவிட்டு இருந்தவன் அப்படியே தூங்கிப்போனான், பாவம்.

எத்தகு நெருக்கடிகள் மத்தியிலும் உறுதி தளராத இரும்பு மனம், அதிகம் பேசாதவன். போர்க்களத்தில் பேசுவான் - உறுதியாய், தன்னம்பிக்கையுடன், சக போராளிகளை இலகு நிலையில் வைத்திருக்கும் நகைச்சுவையுடன்.

இந்தியச் சண்டையின் ஆரம்ப நாட்கள். எமது பொன்னாலைப் பனை வெளிகள் ஊடாக அந்நியப் பாதங்கள். அனுபவம் குறைந்த எமது வீரன் ஒருவனிடம் இயந்திரத் துப்பாக்கி. அவனது சூடுகள் உயர்ந்து மேலாய், மிக மேலாய், வீணாகிப் போயின. இதைக்கண்ட ராஜன் "டேய்தம்பி ஆமி இன்னமும் பனையிலை



ஏறேல்லை. கொண்டா ஜி. பி. எம். ஜியை.'' ஆயுதம் கைமாற அந்நியர் தறிகெட்டு ஓடுகிறார்கள். அந்தச் சண்டையும் ராஜனின் தொடையில் ஆழமாய் ஓர் சூட்டுத் தழும்பினைப் பதித்து வைக்கிறது.

பொன்னாலையில் கால் கிழிந்து, இந்தியாவில் காயம் ஒழுங்காக மாறமுதல், நாட்டுக்கு என்று துடிதுடித்துப் புறப்பட்டு, மீன்பிடிப் படகில் தீவுக்குவந்து, இங்காலேவந்தால், எங்கும் இந்தியத் தலைகள், தடங்கள்.

"எங்கட ஆட்கள் எங்கே'' என்று எல்லாச் சனத்தையும் கேட்டுத்திரிந்து சந்தித்தான்.

யாழ்ப்பாணத்தில் எங்கும் இராணுவ முகாம்கள் நிறைந்திருந்த காலத்தில் ராஜன் வந்துசேர்ந்ததும், இந்தியர்கள் பிரச்சினையை வேறுவிதமாகச் சந்தித்தார்கள். அவனது உறுதி இந்தியர்களைத் திணற வைத்தது.

அரைத்தூக்கம் கலையாத அதிகாலைப் பொழுது, ஊரில் உள்ள நாய்கள் எல்லாம் குரைக்கத்தொடங்க, உடலில் உள்ள இரத்தம் எல்லாம் ஒன்றாகிச் சூடாகிப் பாயும்.

''டேய் தும்பன், வெற்றி, எழும்புங்கோடா!''

''ரங்கன்''

'' அண்ணை நான் முழிப்புத்தான்.''

''வெளிக்கிடுங்கோ...''

சிரிப்புத்தான் வரும். என்னத்தை வெளிக்கிடுவது? ஜீன்ஸ் போட்டபடி, கோல்சர் கட்டியபடி வெறு நிலத்தில் படுக்கை, தலைமாட்டில் ஆயுதம் வைக்கவென விரித்திருக்கும் சாரத்தை எடுத்துச் சுருட்டி இடுப்பில் கட்டினால் சரி.

''சரி வெளிக்கிட்டாச்சு.''

நாய்கள் குரைக்கும் சத்தம் நகர - நகர, அது இராணுவத்தின் நகர்வை நிழலாய்க் காட்டும.

முன்படலை பிசகென்று பின் வேலியால் பாய, காலில் நெருஞ்சி குத்தும். முந்தநாள் வாங்கிய செருப்பு தேற்றைய ரவுண்டப்பில் தவறிப்போனது நினைவுக்குவரும்.

விரைவாய் சத்தமின்றி, சத்தமின்றி விரைவாய் அல்லது உள்ளே, ரவுண்டப்புக்கு உள்ளே.

ராஜன் அருகில் இருந்தால் அனைவருக்கும் நமபிக்கை - எப்படியும் ரவுண்டப்பை உடைக்கலாம்.

''கட்டாயம் உடைக்கலாம், ஒருத்தரும் பயப்படாதேங்கோ''

''டேய் தும்பன் நீ முன்னுக்குப்போய் எத்தனை வாகனம் நிற்குதெண்டு பார். கண்டிட்டான எண்டால் அடியாமல்வராத''

''ரங்கனும் வெற்றியும் அங்காலபோய் அடுத்த சந்தியைப் பாருங்கோ. டேய் ரங்கன் ஜி 3 ரவுண்ஸ் தட்டுப்பாடு சும்மா அடிக்காதை''

''தம்பி நீங்கள் என்ன கிறனைட்டோ வைத்திருக்கிறியள். பயப்படாதேங்கோ. என்னோடை நில்லுங்கோ. நான் சொல்லேக்கை கிறனைட் அடிக்கவேணும்''.

''அம்மா எல்லோரும் இதில குவிஞ்சு நிண்டால்தான்கட்டாயம்காணுவான்.நீங்கள்பிள்ளையளைக் கூட்டிக்கொண்டு உள்ளுக்குப் போங்கோ, இந்தாங்கோ கோப்பையையும் கொண்டு போங்கோ.''

கொஞ்ச நேரத்தின் பின் கேட்கும் வெடிச் சத்தங்கள் ஓயும்போது, தேத்தண்ணீர் கொடுத்த அம்மா ''ஆர் பெத்த பிள்ளையளோ முருகா காப்பாத்து'' என வேண்டிக்கொண்டிருக்கும்போது,

இரண்டு றோட்டுக் கடந்து நின்று வரும்ஆட்களிடம் சைக்கிள் கேட்டுக்கொண்டிருப்பார்கள் ராஜனும் அவனின் ஆட்களும்.

கிறனைட்டுடன் வந்த சின்னப்பொடியன் ''ராஜண்ணை நான் உண்மையாய்ப் பயந்திட்டன்; இனிப்பயப்படமாட்டன். நான் அடிச்ச கிறனைட்டில ஆமிசெத்திருப்பானோ?'' என்று கேட்டுக்கொண்டிருப்பான்.

அவர்களின் அநேகமான நாட்கள் இப்படித்தான் விடியும்.

இன்னொரு காலைவேளை, படுத்திருந்த வீட்டு ஒழுங்கையால் தெருவுக்குவர முன்னால் இராணுவ அணி. மற்றவர்கள் காணமுதல் ராஜன்கண்டுவிட்டான். ''இண்டைக்குப்பொழுது சூடாத்தான் விடிஞ்சிருக்கு. நான் இதில வைச்சுத்தொடங்கிறன், நீங்கள் இரண்டுபேரும் மற்றப்பக்கத்தாலை வாருங்கோ.'' இராணுவம் நிற்கும் செய்தியை அலாதியாய்ச் சொல்வதுடன், அந்தக்கணத்திலேயே திட்டமும், தாக்குதலும். எத்தகு சூழ்நிலைகள் மத்தியிலும் ஆபத்தை எதிர்கொள்ளக் கொஞ்சமும் தயங்காத செயலுறுதி - பல கட்டங்களில் ராஜன் சாவின் விளிம்பில் ஏறி நடந்து வந்துள்ளான்.

எமது மண்ணில் அந்நியன் சுதந்திரமாய்த் திரிவதா? நிம்மதியாய் வாழ்வதா? என்று




முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியும், தற்போதைய 'அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி'ப் பொறுப்பாளருமான

# லெப். கேணல் ராஜன்

**(சோமசுந்தரம் சற்குணம்)**

பிறப்பு : 14 - 02 - 1966

வீரச்சாவு : 27 - 08 - 1992

---

குமுறுவான். அவன் அடிக்கடி கூறும் வார்த்தைகள் "மச்சான் உவங்களை இப்படியே விடக்கூடாது. இண்டைக்கு ரெண்டு ஆமியையெண்டாலும் கொல்லவேணும்."

ஒருநாள் பண்டத்தரிப்பு முகாம். "என்ன வெடிச்சத்தம்?" என இந்தியர்கள் சனத்தை விசாரித்துக்கொண்டிருக்கையில் ராஜனும், தும்பனும் தங்கள் பிஸ்டலை இடுப்பில் வைத்த பின்னர், இறந்த இராணுவத்தின் துப்பாக்கிகளை ஆளுக்கொன்றாய் எடுத்தபடி சைக்கிளில் ......

சுழிபுரம் சந்தி முகாம் அருகே. இந்திய இராணுவம் ஜீப்புடன் செத்தபடிகிடக்க......

எம் போராளி காசிமை இழந்த பின்னர், நடு நெஞ்சில் துப்பாக்கி துளைத்த ராஜனைத் தூக்கிக்கொண்டுவந்தனர், தும்பனுடன் நகுலனும் நித்தியும்.

இந்திய அடிவருடிகள் முகாமிட்டிருந்த சுன்னாகம். இரு புறமும் இராணுவக் காவல். அதனுள்ளே கும்மாளமிட்டனர் எம்மினத்தின் அவமானச் சின்னங்கள். திட்டமிட்ட பெரிய தாக்குதல். அதிக ஆட்கள். முதல்நாள் ரோட்டுக்கடக்க முடியாமல் ஒத்திவைத்த தாக்குதல். அடுத்த நாள் முயற்சி செய்தபோது,

இரவு ரோந்து இராணுவத்தை எதிர்கொள்ள, எல்லாமே பாழ்.

ராஜனை இருட்டுக்குள்ளால் இழுத்து வந்து குப்பியைக் கழட்ட, வந்தது நூல் மட்டுமே.

"மச்சான் சுபாஸ் பிறண்அடி கொழுவியிட்டுது. எனக்குப் பெரிய காயம்... இந்தமுறை சரிவராது... எல்லாரும் சாகாமல் இவர்கள் ரெண்டுபேரையும் கொண்டு போங்கோ."

சொன்னவன் பின்னர் கரைச்சல் தராமல் மயங்கிப்போனான்.

"ஐயோ ராஜண்ணை .." என்று, சூட்டும் ரங்கனுமாய் வாய்க்குள் விரலைவிட்டுத் தோண்டி,

தேங்காய் எண்ணெய் பருக்கி, தேங்காய் உடைத்து பால் பிழிந்து பருக்கி,

காரில்வைத்து ஸ்ராட் இல்லை என்று

கத்திதேடி, வேலிவெட்டி பாதை செய்து,

தள்ளுதள்ளு என்று, தள்ளிக்கொண்டுபோய்,

உள் ஒழுங்கை வீட்டில் வைத்து, நீர்வேலிச் சனத்தைக் காவலுக்குவிட்டு,

அந்தநாள்விட்டு அடுத்தநாள் வாதரவத்தைக்குப் போய்ச்சேர, ராஜனும், முரளியும் மயக்கம் தெளிய, லோலோ மயங்கிப்போய், பின்னர் போய்விட்டான்.... எம்மைவிட்டுப் போயேவிட்டான்....

அவனது தோழர்களது இழப்புக்கள் ஒவ்வொன்றின்போதும், அவன் அமைதியாய்க் குமுறுவான். கண்கள் வெறிக்க அவன் பாறையாய் இறுகுவான்.

ராஜனது இளமைக்கால நண்பன் தெய்வா, பாடசாலைக்காலத்திலிருந்து ஒன்றாய்க் கடலுக்குத் தொழிலுக்குப்போய்வந்து..., படித்துப்பந்து விளையாடி..., இயக்கத்திற்குவந்து..., ஒரே படகில் இந்தியா போய்..., கூமாப்பிட்டிப் பயிற்சி முகாமில் ஒன்றாய் இருந்து..., மலைக்கு மூட்டை சுமந்து..., கழுதை கலைத்து..., பணிஸ்மன்ற் வாங்கி..., பயிற்சி முடித்து..., கரைக்குவந்து..., எல்லாம் வரை ஒன்றாய் இருந்த தெய்வா பிரிந்துவிட்டான். கடலில் ஓட்டியாய்ப்போனவன் வரவில்லை. அவன் வரவில்லை என்று மாதகல் அழுதது; ராஜன் அழவில்லை - அந்தப்பாறை இறுகியது.

ராஜனும் தும்பனும் பிரிந்தது கிடையாது. ராஜன் என்றால் தும்பன்; தும்பன் என்றால் ராஜன்.

துப்பாக்கிகள் பங்கிடும்போது "தும்பனுக்கு கையேலாது எம் 16 தான வேணுமம்மான்" - ராஜன் சொல்ல சூடுபட்டு உடைந்து வளைந்த கையை தும்பன் மேலும் வளைத்து வந்து வாங்கிவிட்டு மறைவாய்ப்போய் பெரிதாய்ச் சிரித்தார்கள்.

ஒன்றாய்ச் சாப்பிட்டு, அடிபட்டு, கலைபட்டு ராஜனின் உயிருடன் இணைந்த நட்பு. சுன்னாகத்தில் காலில் இரண்டு வெடிபட்டு - காயம்மாறி இந்தியாவில் இருந்து வந்தபோது, தும்பன் இல்லை! என்ற செய்தி அவனுக்குத் தெரிந்துதானிருந்தது.

இராணுவத்தின் சூடுதானா? விபத்தா? என எல்லோரையும் ஓடிஓடிக் கேட்டு ஓய்ந்திருந்த வேளையில், தும்பன் இல்லாத ஏழாலைக் கிணற்றுக்கட்டு. வாழைத்தோட்டங்கள். பனங்கூடல்கள். கலைபட்டுப் பாய்ந்த வேலிகள். துரையண்ணை வீட்டு ஊஞ்சல் என்று எல்லாமே வெறுமையாய்த் தெரிய ரங்கன் அழுவான்; ராஜன் அழமாட்டான் - அந்தப்பாறை இறுகியது.

ரங்கன் சைக்கிள் உழக்க 'பாரில்' ராஜன். சுட்டுவிரல் விசைவில்லையொட்டியபடி, கொஞ்சம் அழுத்தினால் ரவை பாயும். எங்கும் போகும் சைக்கிள்; சடசட என்று வெடிகேட்கும், சைக்கிள் ஒன்றுடன் கொஞ்சம் ரவையும் செலவாகும்.

"தப்பியது ரங்கனால்" என்பான் ராஜன்; "ராஜண்ணை இல்லை என்றால் நான் இல்லை" என்பான் ரங்கன்.

மாவிட்டபுரத்தில் வைத்து வரிசையாய் வந்த மொட்டை ஜீப்புக்கு அடிக்க, நல்லாய் நடந்த சண்டை நெடுமாறன் இறந்து ரங்கன் காயப்பட, திசைமாறியது.

திருச்சியில், "ராஜண்ணை... ராஜண்ணை" என்று ரங்கன் உரத்துக்கூவி, மெல்ல முனகி அழுது துடித்து, மெளனித்தபோதும், யாழ்ப்பாணத்தில் நின்ற ராஜன் அழவில்லை - பாறை இறுகியது.

மாதகலில் தன்னுடன் நின்ற ஏழுபேரை வைத்து பெரும் கூட்டமாய் வந்த இந்தியக் கைக்கூலிகளை அடித்து கொன்று, கலைத்து, பெரும்தொகையாய் ஆயுதம் அள்ளி வந்தபோது,

எல்லா நாளும் ராஜனுடன் திரிந்த வெற்றி திரும்பி வரவில்லை.

ஆயுதங்கள் எல்லாம் அப்படியே குவிந்து கிடக்க, காயப்பட்ட தம்பியையும், வெற்றியின் உடலையும் குப்பிளானில் நின்ற கிளியிடம் அனுப்பிவிட்டு, ஆயுதங்களுக்குக் காவலாய் நின்றபோதும் ராஜன் அழவில்லை. அந்தப் பாறைதான் இறுகியது.

இந்தியா போனது. தமிழீழ வீடெங்கும் மகிழ்ச்சிக் குரல்கள்; தெருவெங்கும் புலிவீரர் - மிச்சமாயிருந்தன இந்திய எச்சங்கள். புலனாய்வுப் பணியில் ராஜன்.

அவனது மனம் விடுதலைப் போரையும் அதனுடன் இணைந்தவற்றையும் தவிர, வேறொன்றைப்பற்றியும் எண்ணியதே கிடையாது.

இப்படித்தான் ஒருநாள், அவனுடன் பாடசாலையில் படித்தவள், அவனது இயக்கத் தொடர்பிலும் மீண்டும் அறிமுகமாகிப் பழகி கடிதமொன்றில் என்னவோ எழுதி அவனிடம் அனுப்பிவிட்டுக் காத்திருந்தாள்; பாவம்.

கடிதத்தைப் படித்தவன் பக்கத்தில் நின்றவனுடன் நேரேபோய்க் கடிதத்தைக் கிழித்துக் கொடுத்துவிட்டு "போராட்டம் தவிர வேறொன்றும் நான் நினையேன்" என்றான்.

தன் ஆசை மகன் போகும் வாகனத்தையென்றாலும் பார்ப்போமென்று தாய்க் கிழவி றோட்டில் கால்கடுக்கக் காத்து நிற்க, இவன் மாதகலில் தான் போன வேலையை முடித்துத் திரும்பி வருவான்.

சிறீலங்காவுடன் சண்டை தொடங்கியது. ராஜன் ஓய்வின்றிச் சுழன்றான். அடிக்கடி அண்ணையைச் சந்தித்தான். எல்லா இடமும் திரிந்தான். ஒவ்வொரு பங்கருக்கும், ஒவ்வொரு மண்மூடைக்கும் இடம் சொன்னான்.

மயிலிட்டியில் பெரும் சமர், ராஜன் ஊண் உறக்கமின்றி நின்று வழிநடத்தினான். மழையாய்ப் பொழியும் செல்கள்-ரவைகள். மயிலிட்டிச் சண்டையில் மட்டும் இரண்டு தடவைகள் குண்டுச்சிதறல்கள் அவனைத் துளைத்துச் சென்றன. ஓய்வில்லை - அங்கு நடந்து கொண்டிருந்த யுத்தத்தில் இருந்து அவனால் ஒதுங்கியிருக்க முடியவில்லை.

கோட்டை முற்றுகை இறுக இறுக, எங்கள் தளபதிகளின் தூக்கமற்ற இரவுகள் பெருகிக் கொண்டிருந்தன. மணியந்தோட்டத்தில் இருந்து பொன்னாலைவரை நின்ற இளம் போராளிகள் ராஜனைக் கண்டு சிரிப்பர். இரவில்லை, பகலில்லை, ஓய்வில்லை, உணவில்லை- தன்னைப் பிழிந்து முற்றுகைக்கு உரம்கொடுத்தான். பானுவின் உற்ற துணையாய் முற்றுகைக்குத் துணைநின்றான்.

எம்மால் உள்ளிறங்கமுடியாதுபோய்விட்ட, இரண்டாவது கோட்டை உட்புகல் நடவடிக்கை முடிந்து விடிந்தபோது,

"றோமியோ நவம்பர் றோமியோ நவம்பர்" என்று பானுவின் வோக்கி கூப்பிட்டபோதும், பதிலில்லை.

மானிப்பாய் மருத்துவமனையில் பேச்சுமூச்சின்றி கிளி, ஜவான் ஆகியோருக்கு இடையில் கந்தல் துணிபோல் சுருண்டுபோய்க் கிடந்தான்.

காயம்மாறி கொஞ்சம் தேறி எழும்பிவந்தவன், இப்போ சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில்.

இந்தக்காலம் ராஜனை ஒரு சிறந்த நிர்வாகியாக உருவாக்கியது. பால்ராஜின் துணைவனாய்நின்று, படைப்பிரிவை உருவாக்குவதில் பெரும்பங்காற்றினான். சகல போராளிகளுடனும் அன்புடன் - கண்டிப்புடன் கடுமையான பயிற்சிக்காலம்.

தமிழீழத்தின் எல்லா இடங்களில் இருந்தும் வந்திருந்த போராளிகள்.

குடும்பத்தைப் பிரிந்து வந்தவர்க்குத் தாயாக, தந்தையாக, நண்பனாக, ஆசானாக.

தமிழேந்தி அண்ணையிடம் நின்று நின்று தூங்கி, சண்டைபிடித்துக் காசு வாங்கி, இல்லையென்றால் ஊரில் கடன் வாங்கி, அதுவும் முடியாவிட்டால் வீட்டுக்குப் போய் அதை - இதைத்தூக்கி, தமையன் வியாபாரத்துக்கு வைத்திருக்கும் சாமான்களை அள்ளி வாகனத்தில் ஏற்றி......

எப்படியோ போராளிகளை தனது பிள்ளைகளாய் - உயிராய்ப் பார்த்தான்; பராமரித்தான்.

வன்னி யுத்தகளம். எங்கள் வன்னிக் காடுகளை - எதிரியின் பல்லாயிரம் படைகள் - ஊடறுத்துவர முற்பட்ட 'வன்னிவிக்கிரம'; பெரும் படைகொண்டு ராஜன் மோத எதிரிப்படை திணறியது. சுட்டு வீழ்த்திய கெலிக்கொப்டர் துண்டுகளை அள்ளி எடுத்து அனுப்பிய பின்னரும், தொடர்ந்து சண்டை.

எல்லாப்பக்கங்களாலும் பூவரசங்குளம் சந்திக்கு வந்து ஏறிய எதிரிகளை எதிர்கொண்டனர் எம்வீரர்கள். கடும் சண்டை. ஆகாயத்தை நோக்கிநின்றவைகளும் நிலம் நோக்க, சகல ஆயுதங்களையும் ஏந்திய கரங்கள் உறுதியாய் நிற்க, ஓடினான் எதிரி.

கொஞ்சநாள் இடைவெளியில் எதிரியின் இன்னொரு முயற்சி. வவுனியாவால் நகர்ந்து தோற்ற எதிரி, இம்முறை மன்னார்ப் பக்கமாய்......

இம்முறை சண்டை கொஞ்சம் கடுமையாய்..... எமது வீரர்களை இரு புறமும் சூழ்ந்தபடி எதிரி. ராஜனை உணர்ச்சி வசப்பட வைக்கும் கடும் சண்டை.

எதைப்பற்றியும் யோசிக்காது எதிரியின் முகம் தெரியும் தூரத்தில் நின்று - மோதிய, ராஜனின் விரல் இல்லாத உள்ளங்கையை உடைத்தபடி ஒரு ரவை; இன்னொரு ரவை அதேகையில் நடுவில்.

மிக அருகில், எதிரியின் துப்பாக்கி சடசடக்க உறுதியாய் எதிர்த்து நின்றனர் தோழர்கள்.

உள்ள ஆயுதங்கள் எல்லாம் கொண்டு போய், அடிஅடி என்று அடித்து ஆமியைக் கலைத்துவிட்டு மயங்கியபடி கிடந்தவனை, இழுத்துவந்து சேர்த்தான் ரூபராஜ்.

அன்று ராஜன் திரும்பிவந்தது நம்பமுடியாத அதிசயம். அவன் மயங்கி வீழ்ந்து கிடந்தபோது எதிரி அருகில், மிக அருகிலேயே நின்றிருந்தான்.

ஆனையிறவுப் பெரும்போர்க்களம். ஓய்வின்றி பம்பரமாய் ராஜன்.

சென்றி நிற்கும் பங்கருக்குள், பசீலன் பொயின்ரில், சமையல் கொட்டிலில், சந்தியில் இருந்த மெடிக்ஸ்வீட்டில், எங்கும் நின்றான்- எல்லாநேரமும் நின்றான்.

கட்டைக்காட்டில் ஆமியின் கவசவாகனம் நகர்ந்தாலும் ஆர். பி. ஜிக்கு றோமியோ நவம்பர்-

(11 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணீரின் நெருக்கம்

"அம்மன்ர வாசலுக்குத் தானேய்யா...... அதொண்டும் நடவாது" சகுந்தலை தந்தைக்குப் பதில் சொன்னாள். தந்தைக்கு மட்டுமல்ல அவள் தனக்குத் தானேயும் அதனைத்தான் சொன்னாள். அவளால் இன்று அங்கு போகாமல் இருக்க முடியாது.

நெஞ்சு காய்ந்த தவிப்பு. மகள் போவதைத் தடுக்க முடியாதா என்ற ஏக்கம். முருகேசருக்கு வியர்த்தது.

"சனங்கூடுற இடத்தில அவனொண்டும் செய்யான்; அப்பிடிச் செய்தா ஊருலகத்திற்கு பதில் சொல்ல ஏலுமே......?" மருமகன் துணைக்கு வந்தான்.

'ஊர் .... உலகம்......ம்......' மனதிற்குள் வெப்பம். ஆழ்ந்த பெருமூச்சொன்றுக்கு ஏற்ற மாதிரி நெஞ்சு ஏறி இறங்கியது.

"உங்கால...... மட்டக்களப்பு திருகோணமலைப் பக்கத்தில ஆயிரக்கணக்கான சனம் கொல்லப்பட்டு...... ரேழிந்து சிதைந்து போய்...... இதெல்லாம் இந்த உலகத்தின்ர......" சொல்வதால் என்ன விளையப் போகிறது? முருகேசர் வார்த்தைகளைத் தொடராமல் சுவரில் சாய்ந்து வெறுமையில் எதையோ தேட முயன்றார்.

அவருக்கு எல்லாமே மகள்தான்; அவரது வாழ்வு, இன்ப துன்பம் எல்லாமே அவள்தான்!

அவர்கள் வாசலிற்கு வந்தனர். சின்னவளை சகுந்தலை வைத்திருந்தாள். மூத்தவள் தகப்பனுடன் ஒட்டிக்கொண்டு நடந்தாள்.

மகளும் மருமகனும் கண்டாயத்தைக் கடக்கும்போது முருகேசர் நிமிர்ந்து பார்த்தார்.

'தேவி உன்ர வாசலுக்கு வாற என்ர குஞ்சுகளுக்கு ஒரு தீங்கும் வரவிடாமல் பாரம்மா.' கைகளைக் கூப்பினார். கண்களில் நீர் துளிர்த்தது.

★ ★

கண்ணகி அம்மன் வாசல். சற்று அதிகமாகவே மக்கள் கூடி நின்றார்கள். வழமையான வைகாசிப் பொங்கல் என்றால் இடம் கொள்ளாத சனமாக இருக்கும்.

அவை எல்லாம் கனவாகி மறந்துபோன நாட்களாகப் போய் விட்டன.

இப்போதெல்லாம் படையினரின் ரவைகளுக்கும் வானூர்திகளின் குண்டுகளுக்கும் தேவைப்படும் இலக்காக, அந்த ஆலயம்தான் இருக்கிறது.

கோயிலையும் கோபுரத்தையும் பார்த்தவுடன், நெஞ்சில் கை வைத்து கண்களை மூடினாள் சகுந்தலை. மனதிற்குள் ஆயிரம் வேண்டுதல்கள்.

சிறுகதை

மூன்று பக்கங்களாலும் கோயிலின் வீதியை மருவி, முற்றும் துறந்த முனிவன் ஒருவனைப் போல் அசையாது, அமைதியாகத் துயில் கொள்ளும் நந்திக் கடலைப் பார்த்தவள், கண்கள் பனிக்க அப்படியே சங்கரனைப் பார்த்தாள்.

திருமண பந்தமென்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறதோ வேறு எங்கு நிச்சயிக்கப்படுகிறதோ தெரியாது! ஆனால் அதற்கோர் அதிசயமான புனிதத் தன்மை உண்மையிலேயே இருக்கிறது. இல்லையென்றால் சில வருடங்களுக்கு முன்னால், இந்த வீதியில் திரண்டிருந்த லட்சக்கணக்கானவர்களில் சங்கரனை அவள் எப்படிக் கண்டு கொண்டாள்?

இன்று இரண்டு குழந்தைகள். அவளைப் பொறுத்தவரை எல்லாமே அந்தக் கண்ணகித் தாய் தந்ததென்ற உணர்வு. அதனால் தான் ஒவ்வொரு பொங்கலுக்கும் வருகைதர அவள் துடிப்பாள். வர முடியாமல்போகும் பொழுதுகளில் கவலையுடன் சோர்ந்து போவாள்.

கோயிலடியில் உண்மைப் பொருளின் தேடல். மக்களின் பக்திப் பிரவாகம். ஆனால், சிறு கடலின் மறுமுனையில் இராணுவத்தினரின் கழுகுக் கண்கள் இவர்களை இலக்கு வைக்கத் தொடங்கி இருந்தன.

"ஐயா, சொன்னதிலையும் உண்மையிருக்கு. கும்பிட்டுட்டு கெதியாப் போயிட வேணும்."

"உண்மைதான், ஆனால் அங்க பார் செஞ்சிலுவைச் சங்கக்காரரர் நிக்கினம்."

செஞ்சிலுவை பொறிக்கப்பட்ட வண்டி தன்னை நன்றாக வெளிப்படுத்திக் கொண்டு நின்றது. பின்புறமாக அந்த செஞ்சிலுவையுடன் அகன்ற கொடி காற்றில் ஆடிக்கொண்டிருந்தது.

அக்கரையிலிருந்து பார்க்கும் எந்த ஒருவனுக்கும் இங்கு எதுவுமே தெரிய முதல், இந்த வண்டியும் கொடியும் நிச்சயமாகத்தெரிந்து விடும்.

அதைப் பார்த்ததும் இனிப் பிரச்சினை இராது என்ற உணர்வு மனதில் ஒருவித அமைதியை ஏற்படுத்தியது.

வாசலில் சன நெரிசல். சகுந்தலை எப்படியோ கோயிலின் உட்பிரகாரத்தில் நின்றாள். தந்தையின் காலடியில் குழந்தையை இறக்கி விட்டு, கைகளைக் கூப்பினாள். அவளும் கண்ணகியும் ஒன்றிப் போனார்கள்.

மனவுலகில் அவள் கண்ணகித் தாயுடன் பேசிக்கொண்டிருந்தாள். அவளின் கணவன்...... பிள்ளைகள், அவர்களது நல்வாழ்வு......

கண்களில் நீர் வழிந்தது. வாய் முணுமுணுத்தது. 'தாயே என்ர அவருக்கும் பிளளைகளுக்கும் எந்தக் கெடுதியும் வராமல் பார்த்துக் கொள் அம்மா.'

அந்த நேரம்தான், வெடிப்பின் அதிர்வொன்று காற்றை அசைத்துச் சென்றது. மனிதர்களும் சுவர்களும் அதிர்ந்தன,

காற்றில் அவலக் குரல்கள் நிறைந்தன. மக்கள் சிதறி ஓடினார்கள். என்ன செய்வது......? எங்கு ஓடுவது......?

சகுந்தலை சின்னவளைத் தூக்கி அணைத்தாள். சங்கரன் மகளை அணைத்தபடி மனைவியை இழுத்துக்கொண்டு ஓடினான்.

வெளிவீதி. அவலம் நிறைந்த கதறல்கள் நெஞ்சத்தை அழுத்தின. அவர்கள் ஓடினார்கள்.

அகன்ற கொடியுடன் அசையாது நின்றது செஞ்சிலுவைச் சங்க வண்டி; அதற்கு அருகாக...— அவர்கள் ஓடினார்கள்.

காற்றைக் கிழித்துவரும் எறிகணையின் ஓசை...... அய்யோ...... அவர்களுக்கு நடுவில்...... புகையும், மணலும், இரத்தமும், தசைகளும்...... அவளுக்கு நினைவு இருந்தது. வாய் முணுமுணுத்தது.

'தாயே...... என்...... அவரையும் பிள்......'

★ ★

வைத்தியசாலைக் கட்டிலில் சகுந்தலை அறிவற்றுக் கிடந்தாள். அவள் போய்விடுவாளா? தன் கணவனுடனும் சின்ன மகளுடனும் போய் விடுவாளா?

மனங்களில் எழுந்த கேள்விகளுக்கு விடை அங்கு இருக்கவில்லை.

காயம் பலமானது. அவள் தப்பினாலும் தப்பலாம். அவளுக்கு அருகாக அடுத்த கட்டிலில் மகள் படுத்திருந்தாள். அந்தப் பிஞ்சின் வலது கரம்...... அவளின் கை எங்கே......? இந்தத் தேசத்தின் துயரம் அவளின் நெஞ்சத்தில் பதித்த மாதிரி உடலிலும் காயத்தை ஏற்படுத்தி விட்டதா......?

இரு நாட்கள் கடந்து சென்றன.

சகுந்தலை அருண்டாள். சாதுவாக கண்களைத் திறந்தாள். உயிரற்ற விறைத்த பார்வை. ஒரு தடவை கண்களைச் சுற்றி ஆழமாகப் பார்த்தாள்.

"எங்கே...... அவர்......?"

"இவளவு நேரமும் நின்று போட்டு இப்பதான் வெளியில போறார்; வருவாரம்மா." பச்சைப் பொய்தான் ......ஆனால் அவளிருக்கும் நிலையில் எப்படி அதைச் சொல்வது ......? அவன் வரவே மாட்டான் என்றால், அந்த வார்த்தைகளே அவளைப் பலி எடுத்து விடாதா......?

கண்களை மெதுவாக மூடினாள். 'கண்ணகி அம்மா...... அவருக்கும் பிள்ளைகளு......' வார்த்தைகளை முடிக்க முதலே அவள் திரும்பவும் அறிவற்றுப் போனாள்.

மூன்றாவது நாள்.

பகற் பொழுது. அவள் மீண்டும் விழித்தாள். விழிகளில் பரிதவிப்பு, கண்களை அகலவிரித்துச் சுற்றிப் பார்த்தாள். முகத்தில் ஏமாற்றம். துயரத்தின் சாயல்.



"அவர்...... எங்க......" விட்டு விட்டு வெளிவந்த வார்த்தைகளின் ஓசை மனதின் வேதனையைச் சொல்லின.

"அவர் சின்னவளை விட்டுட்டு வாறனெண்டு ஊருக்கு போட்டார் பிள்ளை; நாளை நாளாண்டைக்கு வந்திடுவார்." திரும்பவும் பொய். அவளைக் காப்பாற்ற முயலும் பயங்கரமான பொய்.

" இங்க, அம்மா முழிச்சிட்டா" மகளுக்கு யாரோ தாயைக்காட்ட முயன்றார்கள். மகளைக் கண்டதும் அவள் சாதுவாகச் சிரித்தாள். எழ முயன்றவளை தாங்கி தலையணைகளில் சாய வைத்தார்கள்.

கைகளை உயர்த்த முயன்று முடியாமல் சோர்ந்து போய் கண்களால் 'வாம்மா' என்றாள்.

தாயைக் கண்ட தவிப்பு - மகள் வேகமாக கைகளை உயர்த்தித் தாவ முயன்றாள்.

'கை ...... என்ர குழந்தையின் கை ......' அவள் பார்க்க விரும்பாமல் கண்களை இறுக மூடினாள். முகத்தைச் சுருக்கிக் கொண்டே ஒருபக்கமாகச் சாய்ந்தாள்.

கண்ணீர் வழிந்தது. அழுதாள். விம்மினாள். மறுபடியும் தன்நிலை இழந்து போனாள்.

நான்காவது நாள், அவள் அடிக்கடி விழித்தாள். விழிக்கும் போதெல்லாம் அந்தக் கேள்வியையே திரும்பத் திரும்பக் கேட்டாள்.

அதே பதில். ஏதோ ஒரு வடிவில். ஒவ்வொரு முறையும்......

நேரம் செல்லச் செல்ல அவளது விழிகளில் கலவரம் படர்ந்தது. உடல் நடுங்கியது. அச்சத்துடன் மிரண்டு மிரண்டு பார்த்தாள். கண்களில் நீர் வழிந்தது. அழ முயன்று அடிக்கடி தோற்றாள்.

அவளது கேள்விக்கு அங்கு விடை இருக்கவில்லை. அவள் போகட்டும். போகும்போதென்றாலும் நிம்மதியாக ...... அந்தத் துயரத்தைக் கேளாமலே போகட்டும்.

நீண்ட நேர இடைவெளி. விழித்தாள். இந்த முறை எவரையும் எதையும் கேட்கவில்லை. முகத்தில் திருப்தி நிறைந்த அமைதி. அவள் வேண்டினாள்; கண்களை மூடி இதயத்தால் வேண்டினாள்.

'தாயே...... என்ர ......' வாய் முணுமுணுத்தது, அதன் பின்பு அவள் விழிக்கவே இல்லை.

★ ★

முருகேசர் பேத்தியைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வெளியே வந்தார்.

எல்லாமே வெறிச்சோடிப் போய்க் கிடந்தது. அந்த முற்றம், ஊர், உலகம், காற்று, களப்பு, கடல் எல்லாமே......

"தாத்தா, அம்மா அப்பாவை எங்க போட்டினம்?" அவள் சினத்துடன் முனகினாள்.

"அவை கோயிலுக்கு போட்டினமம்மா"

"என்னை விட்டுட்டு ...... ஏன் போனவை?" அவள் அழுவதற்குத் தயாராக வாயைக் கோணலாக்கினாள்.

"என்னையும் ......, விட்டுட்டு தானம்மா போட்டினம்." முருகேசரின் குரல் தளம்பியது; தழு தழுத்தது. கண்கள் கலங்கி ...... கண்ணீர், கண்ணீர், கண்ணீர்.

இந்தத் தேசத்திற்கு கண்ணீர் தான் எவ்வளவு நெருக்கமாகப் போய்விட்டது!

'தாத்தா பாவம், அம்மாவும் அப்பாவும் வரட்டு அடிக்கவேணும்'

அவள் கிழவரின் முகத்தைத் திருப்பி, தப்பி இருக்கும் இடது கையினால் அழுத்தித் துடைத்தாள். ❋

# ஒரு புலிவீரனிடமிருந்து அம்மாவுக்கு....

25.02,1992

அன்புள்ள அம்மாவிற்கு,

தமிழீழ தாகத்தை நெஞ்சில் சுமந்தநிலையில் உன் மகன் வரையும் இறுதி மடல் இதுவாக இருக்கட்டும். நான் இளம்பிறை, தமிழ்மாறன் ஆகிய இரு போராளிகளோடு இனியில்லை என்ற அளவிற்கு பாசத்தைச் செலுத்தும் விதத்தில் என் மனதில் பாசம் என்ற விதையை விதைத்து வளர்த்தெடுத்ததற்கும், என்னைத் தமிழீழத் தாயின் தவப்புதல்வனாக்கி எத்தனையோ உடன் பிறவாச் சகோதரங்களுடன் பழகவிட்டதற்கும், நீங்களும் ஓர் தமிழ்த்தாய் என்ற வகையில் உங்கள் மகனின் மனப்பூர்வமான நன்றிகள்.

நான் பல்கலைக்கழகப் படிப்பை நிறுத்திவிட்டு இயக்கத்திற்கு வந்தது உங்களிற்கு வேதனையாக இருக்கலாம். எத்தனையோ கஷ்டப்பட்டு பெற்று வளர்த்து ஆளாக்கிய உங்களிற்கு உள்ள வேதனை, உங்களைப் பொறுத்த வரையில் நியாயமாக இருக்கலாம், ஆனால் என்னைப் பெற்ற உங்களிற்கு வேதனை இருக்குமானால், பல்லாயிரக்கணக்கான மக்களைத் தன்மடியில் பெற்றெடுத்த தமிழீழத்தாயின் மனம் என்ன வேதனைப்படும்? சொல்லுங்கள் அம்மா! நான் அந்தத்தமிழீழத் தாயின் அடிமை விலங்கொடிக்கத்தானே புறப்பட்டேன்? மாறாக கள்ளுக் குடித்தேனா; களவெடுத்தேனா; ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தேனா; இல்லையம்மா இல்லை. உன் பிள்ளையை உன் முன்னால் அடித்துக் கொன்றால் அதைப் பார்த்துக்கொண்டு இருப்பாயா? தமிழீழத்தாயின் தவப்புதல்வர்கள் - தவப்புதல்விகள் எத்தனைபேர் சுட்டுத்தள்ளப் படுகிறார்கள்? தீயிட்டுக் கொளுத்தப்படுகிறார்கள்? இதைத் தடுக்க வேண்டாமா அம்மா? தமிழீழத்தாயின் தேகமெங்கும் இரத்தவடுக்கள்; அவள் மேனியெங்கும் சிவப்பு நிறம். இதை அகற்ற வேண்டாமா அம்மா? தமிழ்த்தாயின் கால்களிலும் கைகளிலும் அடிமைச் சங்கிலி கட்டப்பட்டுள்ளதே; இதை அறுக்க வேண்டாமா அம்மா? நம் தமிழீழத். தாய்க்கு நேர்ந்த துயரை நாமல்லவா துடைக்க வேண்டும்



லெப். தமிழ்மாறன்
(நெல்லிநாதன் விவேகானந்தன்,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை)
என்ற இப் போராளி, வெற்றிலைக்கேணியிலிருந்து இயக்கச்சி நோக்கி முன்னேறிய படையினருடனான சண்டையின்போது, 09.07.92 அன்று, வீரச்சாவு அடைந்தார்.
இவர் தனது தாயாரிற்கு எழுதியகடிதம் இது.

எத்தனை ஆயிரம் பெண்கள் போராட்டக்களத்தில் குதித்திருக்கிறார்கள். நகைகள் போடும் கனவுகளைத் துறந்து, தாவணி போடும் கனவுகளைத் துறந்து அவர்கள் போராடுகிறார்களே! எத்தனை சிறுவர்கள் தாயகத்திற்காக வந்திருக்கிறார்கள்! இவர்களுக்குப் படிக்கத் தெரியாதா; பட்டம் பெற்று வாழத்தெரியாதா; தாங்கள் மறுநேரம் சாவைச் சந்திக்கலாம் என்று இவர்களுக்குத் தெரியாதா? இத்தகைய பிஞ்சு மலர்கள் எல்லாம் நஞ்சையணிந்து கல்லிலும் முள்ளிலும் நடந்து செல்கையில், நாம் பஞ்சணையைத் தேடி வெளிநாடு செல்வதா? இது எமக்கு அழகா? இந்தச் சிறுவர்களும், பெண்களும் இழக்கக் கூடாதவற்றையெல்லாம் இழந்து வந்திருக்கிறார்களே, எதற்காக? சுதந்திரத்தை இழக்கக்கூடாது என்பதற்காகத்தானே?

இவர்கள் துன்பங்களைச் சுமந்து கொண்டிருக்கையில் நாம் புத்தகமும் எடுத்துக் கொண்டு படிக்கச் செல்வதா?

நாம் வீதியால் உல்லாசமாய்ப் போய்த்திரிய 15 வயதுப் பாலகன் உயிர் துறப்பதா? வேண்டாம் அம்மா வேண்டாம். அடுத்த சந்ததியும் இப்படி வருவதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாதம்மா. நாம்தான் போராடி அடுத்த சந்ததியை வளமாக வைத்திருக்க வேண்டும்.

இன்று 4250இற்கு மேற்பட்ட போராளிகள் 'வீரமரணம் அடைந்திருக்கிறார்கள். அவர்களின் தியாகங்களை நாம் மறப்பதா? ஒவ்வொரு போராளியினதும் வாழ்க்கை எவ்வளவு பயங்கரமானது; இத்தனை போராளிகளும் எங்களை நம்பித்தானே சாவை அணைத்துக் கொண்டார்கள்; இவர்கள் தங்கள் கனவுகளை நிறைவேற்றுவார்கள் என்ற இறுதி ஆசையுடன் தானே மடிந்திருப்பார்கள்? நாம் இன்னும் போராடாது காலம் கழித்தால், அது இவர்களுக்கும் இந்த மண்ணுக்கும் செய்த துரோகமல்லவா?

தென்தமிழீழத்தில் எத்தனை ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். லட்சக்கணக்கான தமிழர்கள் அங்கிருந்து கலைக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர். இதெல்லாம் இன்றைய காலகட்டத்தில் போராட்டத்தின் தேவை-அவசியம் என்பதையல்லவா வலியுறுத்துகிறது. இன்று ஒவ்வொரு தமிழனும் தேவையில்லாமல் அநியாயமாகச் சாகிறானே! இவர்களின் உடல்கூட தெருக்களில் நாதியற்றுக் கிடக்கிறதே!

இது தேவையா அம்மா? இப்படியானதொரு சாவை நான் விரும்பவில்லை; நான் எனது சாவை ஒரு சரித்திரமாக்கவே விரும்புகிறேன்.

அம்மா, என்மீது நீங்கள் கூடுதலாகப் பாசம் கொண்டுள்ளீர்கள் என்று சொல்லலாம். ஆனால் உங்களிலும்விட இருவர் என்மீது கூடுதலான பாசத்தைச் செலுத்தி விட்டார்களே! ஒருவன் இளம்பிறை, மற்றையவன் தமிழ்மாறன். நானும் அவர்கள்மீது இணைபிரியாத பாசத்தைச் செலுத்திவிட்டேனே, இது என் வீட்டில் நிகழுமா? அவர்கள் எங்கோ ஒரு மூலையில் பிறந்தவர்கள். நான் எங்கோ ஒரு மூலையில் பிறந்தவன். எந்தவித சொந்தபந்தமுமற்ற நிலையில் எல்லாவற்றையும் இழக்கத்தயாராக இயக்கத்திற்கு வந்த போதுதானே, இப்படியானதொரு பாசத்தைக் காண்கிறேன்.

இயக்கத்திலுள்ளவர்கள் கருணையற்றவர்கள், பாசம் என்றால் என்ன என்று தெரியாதவர்கள் என்று சிலர் நினைப்பதுண்டு. இது தவறு. தாய்மீது பாசம் இல்லாவிட்டால் தாயகமண்மீது எவ்வாறு பாசம் வந்திருக்கும்? இவர்கள் தாயக விடுதலை எனும் கடமையின் முன் பாசத்தைத் தலைகுனியச் செய்பவர்கள்.

நான் வீரமரணமடைந்தால் நீங்கள் துன்பப்படுவீர்கள் என்பது எவ்வளவிற்கு உண்மையோ, அதேபோல் எனக்கருகில் உள்ளவர்கள்-என் மீது அளவற்ற பாசத்தைச் செலுத்தியவர்களும் துன்பப்படுவார்கள் தானே அம்மா? கவிஞர் 'இரும்பொறை' சொன்னார்;

''என்னை மிக அதிகமாக நேசிப்பவர்கள் இன்னும் எனது ஆயுதத்தையும் சீருடையையும்நேசிக்கவில்லை'' என்று. ஆனால் இன்று என்னை மிகமிக அதிகமாக நேசிக்கும் தமிழ்மாறனும், இளம்பிறையும் ஆயுதத்தையும் சீருடையையும் நேசித்துக் கொண்டுதானே இருக்கிறார்கள்!

விடை பெற்றுக் கொள்கிறேன்

இப்படிக்கு
நெ. தமிழ்மாறன்.
நெ. விவேகானந்தன்.

---

தமிழ்மாறன் எழுதிய கவிதை

## அராலிக் கடலே....

நான் வீரமரணம் அடைகின்ற போது
எனது இரத்தம் தோய்ந்த இந்தத்
தீவக மண்ணைக் கழுவிச் செல்கின்ற
புனித கங்கையானது சங்கமிக்கின்ற
அராலிக் கடலிலே மிதந்து செல்கின்ற அலையே......

எனது தாயிடம் சொல்லு,
நாதியற்ற பிணமாய்
தெருக்களில் கிடப்பதை
உன் மகன் விரும்பவில்லை என்று;
அதனால்தான் இன்று
பல்லாயிரம் மக்கள்
மனதில் ஒருவனாகி விட்டான் என்று......
என்னை நேசிப்பவர்கள்
இருப்பாராயின்
அவர்களிடம் சொல்லு,
என்னில் காட்டும் அன்பு
குன்றாது இருப்பதாயின்
எனது ஆயுதத்தையும்
சீருடையையும்
இலட்சியத்தையும்
நேசிக்க வேண்டுமென்று......!

---

## ஓகஸ்ட் - 10 முதல் செப்ரெம்பர் - 25 வரை
## 46 நாட்களில்

★ 150 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர்.

★ 105 சுடுகருவிகள் கைப்பற்றப்பட்டன.

★ முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியும், தற்போதைய 'அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி'ப் பொறுப்பாளருமான லெப். கேணல் ராஜன், மன்னார்ப் பிராந்திய சிறப்புத் தளபதி லெப். கேணல் சுபன் உட்பட 64 புலி வீரர்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள்.

★ யாழ். மாவட்டத்தில் சிங்களப் படையினர், தமது பலாலித் தளத்திலிருந்து - 'பூமியதிர்ச்சி' (20-8-92), 'சதுரங்கம்' (18-9-92) ஆகிய தாக்குதல் நடவடிக்கைகளைச் செய்தனர். சதுரங்கம் நடவடிக்கையின்போது, எமது கடும் எதிர்ப்பினால், இராணுவத்தினர் பழைய நிலைகளுக்குப் பின்வாங்கினர்.

★ 29-08-92 அன்று, மண்டைதீவு படைத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த 41 அடி நீள, அதிவேக நீருந்து விசைப்படகைக் கடற்புலி வீரர்கள் மின்னல்வேக நடவடிக்கைமூலம் கைப்பற்றினர்.

# பொஸ்னியா- இன அழிவுக்குள் ஒரு தேசம்

புதிய சோசலிச - பொருளாதார பரிசோதனையில் ஈடுபட்டு, ஒரு காலத்தில் உலகின் கவனத்தையே தன்பக்கம் ஈர்த்த யூகோஸ்லாவியா நாடு, இன்று சிதைந்து சீரழிந்து கிடக்கின்றது.

மார்சல் டிற்றோ என்ற தேசியத் தலைவனின் கீழ், பல்லினமக்களைக் கொண்ட சமஷ்டி அரசாக இருந்து வந்த நிலை தலைகீழாகமாறி இன்று இரத்தக்களரி நிறைந்த இனவாத - குத்துவெட்டு அரசியலாகக் கீழிறங்கியுள்ளது.

சோவியத்யூனியனில் ஏற்பட்ட அரசியல் பிரளயத்தைத் தொடர்ந்து, சோவியத் ஒன்றியத்துக்குள் அங்கம்வகித்த பல தேசிய இனங்கள் தங்களைத் தனிநாடுகளாகப் பிரகடனப்படுத்திப், பிரிந்து சென்றன. இதைத்தொடர்ந்து சோசலிச ஆட்சிகள் நிலவிய கிழக்கைரோப்பாவிலும் பாரிய அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தன.

சோவியத்யூனியனைப் போன்றே யூகோஸ்லாவிய சமஷ்டியில் அங்கம் வகித்த பல தேசிய இனங்கள், தனிநாடுகளாகப் பிரிந்துசெல்லத் தொடங்கின.

ஆனால், யூகோஸ்லாவிய அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த 'சேர்பிய இனம்' மற்றையத் தேசிய இனங்களின் சுதந்திரப்போக்கை அங்கீகரிக்காது, அவற்றின் மீது போர்தொடுத்து, பலவந்தமாக இணைத்துவைத்திருக்க முயல்கின்றது.

இதன்காரணமாக 'யூகோசமஷ்டி' யின் ஒரு குடியரசான குரோசியாவில், சண்டை மூண்டது. அதன் பின்னர்பொஸ்னியா-கெர்சகோவினாவுக்குச் சண்டை திரும்பியது.

இன்றுவரை பொஸ்னிய - கெர்சகோவினாவில் மட்டும் 12,000 மக்கள் கொல்லப்பட்டுவிட்டனர்; 20 இலட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளனர்; ஆயிரக்கணக்கில் மக்கள் காணாமல் போயுள்ளனர். பொஸ்னியா - கெர்சகோவினாவின் நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கைச் சேர்பியர்கள் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர். இந்நாட்டின் 41 வீதமான முஸ்லிம்கள் தடுப்பு முகாம்களிலும், அகதிமுகாம்களிலும், வைக்கப்பட்டுள்ளனர். சேர்பியப் பேரினவாதத்தால் பொஸ்னியர்களும், குரோசியர்களும் பெருந்தொகையில் கொல்லப்படுகின்றனர்.

தெருக்களில் பிணங்கள் குவியல் குவியலாகக் கிடப்பது, அங்கே சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. வைத்தியசாலைகள் மீதும் இறந்தவர்களைப் புதைத்துக் கொண்டிருக்கும் உறவினர்கள் மீதும், எறிகணைத் தாக்குதல்களை - பீரங்கித் தாக்குதல்களை-நடாத்துவது அன்றாட சம்பவமாகிவிட்டது.

வைத்தியசாலைகளின் பிரேத அறைகளில் அழுகிய நிலையில், உரிமை கோரப்படாது, நாற்றமெடுக்கும் பிணங்கள் ஏராளம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு - மருந்துகளை எடுத்துச் செல்லும் செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் மீது, சேர்பிய ஆயுதபாணிகள் தாக்குதல்களை நடாத்துகின்றனர்; இரவு-பகலாக மக்கள் பதுங்கு குழிகளுக்குள் வாழ்க்கை நடாத்துகின்றார்கள்; தண்ணீர் இல்லை, உணவு இல்லை, மருந்துகளோ மருத்துவ வசதிகளோ இல்லை.

ஆனால், எறிகணைகளும் பீரங்கித்தாக்குதல்களும் - மக்கள் குடிமனைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் என்ற வேறுபாடுகளின்றி - கண்மூடித்தனமாக நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

1945ஆம் ஆண்டு பாசிச ஜேர்மனி தோற்கடிக்கப்பட்ட பின்னர் ஐரோப்பாக் கண்டத்தில் நிகழும் பாரிய இனப்படுகொலை - இரத்தக்களரி - இதுவாகும். இத்தனை கொலைபாதகச் செயல்களையும் புரிந்துவரும் சேர்பியர்கள், ஒரு பேரினவாதக் கோட்பாட்டைத் தமது அரசியல் இலட்சியமாகக் கொண்டிருக்கின்றனர்.

அதாவது, யூகோஸ்லாவியாவிலும் அதன் அயல்நாடுகளிலுமுள்ள சேர்பியர் அல்லாத மற்றைய இன மக்களை அவர்களின் தாயகத்திலிருந்து அடித்துத் துரத்திவிட்டு, அந் நிலப்பரப்புகளைக் கைப்பற்றி, சேர்பிய பெருநிலம் ஒன்றை அமைக்க எண்ணங்கொண்டுள்ளனர்.




இவ்விதமாக மனிதநேயமற்ற முறையில், பேரினவாதவெறியுடன் இனப்படுகொலையில் ஈடுபடும் இந்த சேர்பிய இனம், இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் ஜேர்மனிய ஆக்கிரமிப்புக்கெதிராக வீரம் செறிந்த - தியாகம்நிறைந்த - விடுதலைப்போராட்டத்தை நடாத்தி, உலகின் நன்மதிப்பைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலகட்டத்தில் சேர்பிய இனம் வெளிப்படுத்திய வீரம்-போராட்ட உறுதி - தியாகம், தேர்ச்சிபெற்ற மூர்க்கமான போர்த்தந்திரம், மாபெரும் துன்ப - துயர அழிவுகளுக்குள்ளும் தாக்குப்பிடித்த தன்மை போன்றவற்றிற்காக உலகின் மதிப்பையும் - பாராட்டுதலையும் பெற்றிருந்தது.

ஆனால் இப்போது,அதே சேர்பிய இனம் மற்றைய இனங்களை அடக்கி ஒடுக்கி, சேர்பிய விஸ்தரிப்புவாத அபிலாசையை அடைய முயல்கின்றது.

இரண்டாவது உலகப்போரின் போது, சேர்பிய கெரில்லாப் போர் வீரர்கள் தமது போர்த்திறமைகளை - தேசியவளங்களைப் பயன்படுத்தி, பாசிச ஜேர்மனிக்கெதிராக இதே யூகோஸ்லாவிய சமஷ்டியின் மக்களைப் பாதுகாக்கப் போராடினர்.

ஆனால், முன்னைய கெரில்லாப் போராளிகளின் சந்ததியான செக்னிக்ஸ் என்ற சேர்பியக் கெரில்லாக்கள், இன்று அதே மக்களை அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு தேசத்தவரிடையே அவ்விதம் கருத்துக்கள் ஏன் மாறுபட்டன? ஒருவரை மற்றவர் கொலைசெய்யும் அளவுக்கு அவர்களைத் தூண்டிய காரணிகள் என்ன?

பாரிய இனப்படுகொலையில் ஈடுபட்ட ஒரு ஆக்கிரமிப்புச் சக்திக்கெதிராக ஒருகாலத்தில் கடுமையாகப் போராடிய ஒரு நாடு, இன்று தானே இனப்படுகொலையில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டப்படுமளவுக்கு எவ்விதம் தள்ளப்பட்டது?

இந்தக் கேள்விகளுக்கான விடை, யூகோஸ்லாவியா அமைந்திருக்கும் பால்கன் பிரதேசத்தினது பூகோள-அரசியல் வரலாற்றிலேயே தங்கியுள்ளது. இவ்வித நீண்ட வரலாற்றுக்குள் செல்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல.

சுருக்கமாக யூகோஸ்லாவியாவின் வரலாற்றைச் சொல்வதானால், முதலாம் உலகப்போரை அடுத்து, 1918 ஆம் ஆண்டு யூகோஸ்லாவிய நாடு உருவாகியது. சேர்பியர், குரோசியர், சிலவேனியர் ஆகிய மூன்று பெரிய தேசியஇனத்தவர்களைக் கொண்ட ஒரு நாடாக, இது அமையப்பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நீண்ட - சிக்கலான வரலாற்றின் விளைவாக, அண்டை அயல் நாடுகளின் சிறுசிறு நிலப்பரப்புகளை யூகோஸ்லாவியா உள்வாங்கி வைத்திருந்தது. இத்தாலி, அவுஸ்திரியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, கிரேக்கம், அல்பேனியா ஆகிய அயல்நாடுகளிடமிருந்து உள்வாங்கிய நிலப்பரப்புகளில் இருந்த பல்வேறு தேசிய இனங்களையும் உள்ளடக்கி, யூகோஸ்லாவியா விஸ்தரிப்புச் செய்யப்பட்டது.

இரண்டாவது உலகப்போரின் போது ஜேர்மனிய - இத்தாலியப் படைகள் யூகோஸ்லாவியாவை ஆக்கிரமித்தன. இதற்கெதிராக மார்சல் டிற்றோவின் தலைமையில் ஒரு தேசிய விடுதலை இயக்கம், மிகவும் வீரம்செறிந்த ஒரு விடுதலைப் போராட்டத்தை நடாத்தியது.

யூகோஸ்லாவிய கொம்யூனிஸ்ட் கட்சியை அமைத்த 'மார்சல் டிற்றோ' பல்வேறு தேசிய இனங்களையும் ஒன்றிணைத்து, ஒரு மாபெரும் விடுதலைப் போராட்டத்தை நடாத்தி, ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்தார்.

இரண்டாவது உலகப்போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து, 1945 நொவெம்பரில் நடந்த தேர்தலில் 96வீத வாக்குகளைப்பெற்று, மார்சல் டிற்றோ ஆட்சிக்கு வந்தார். டிற்றோவின் ஆட்சிக்காலத்தில்,பல்வேறு தேசிய இனங்களையும் கொண்ட ஒரு சமஷ்டி ஆட்சி உருவாக்கப்பட்டது.

இந்தச் சமஷ்டி அமைப்பில், ஆறு சோசலிசக் குடியரசுகள் உருவாக்கப்பட்டன (பொஸ்னியா - கெர்சகோவினா, குரோசியா, சிலவேனியா, மசிடோனியா, மொன்ரெநேகிரோ, சேர்பியா).இத்துடன் சுயாட்சியுடைய மாகாணசபைகள்இரண்டு இருந்தன (கொசோவோ, வொச்வோடினா).

1980 மே மாதம் மார்சல் டிற்றோ இறந்தபின், யூகோசமஷ்டிக்குள் இருந்த பல்வேறு இன மக்களிடையே வரலாற்றுக்காலம் தொடக்கம் இருந்து வந்த பூசல்களும் - பிணக்குகளும் விரிவடைந்து, ஒவ்வொரு தேசிய இனத்திடமும் தேசிய தனித்துவ உணர்வுகள் தோற்றம் கொண்டன.

சேர்பிய இனத்திற்கெதிராக 'சேர்பிய விஸ்தரிப்புவாதக்' குற்றச்சாட்டை, மற்றையத் தேசிய இனங்கள் சுமத்தின. சேர்பிய இனமும் பதில் குற்றச்சாட்டுகளைத் தொடுத்தது. ஆக்கிரமிப்பு, இனவெறி என்ற சொற்பதங்கள் எல்லாப் பகுதியினராலும் பயன்படுத்தப்பட்டு, ஒரு அரசியல் கொந்தளிப்புக்குள் நாடு தள்ளப்பட்டது.

அநேக தேசிய இனங்களிடையே தேசிய சுயநிர்ணயக் கோரிக்கைகள் எழுந்து - வளர்ந்தன.

முதலில், சிலவேனியா குடியரசும் அதைத் தொடர்ந்து குரோசியக் குடியரசும் யூகோ சமஷ்டியிலிருந்து வெளியேறித், தனிநாடுகளாகத் தங்களைப் பிரகடனப்படுத்தின.

யூகோ சமஷ்டியின் அரசியல் அதிகாரம் சேர்பிய இனத்திடமே இருந்தது. யூகோசமஷ்டியில் மூன்றில் ஒரு பங்கு மக்களைக் கொண்ட சேர்பிய இனம், சமஷ்டி இராணுவத்தில் 70 வீதத்தைக் கொண்டிருந்தது.

குரோசியா, சிலவேனியா, பொஸ்னியா-கெர்சகோவினா உட்பட யூகோசமஷ்டியின் அனைத்துக் குடியரசுகளிலும், சேர்பிய இன மக்கள் கணிசமான தொகையில் வாழ்கின்றனர்.

பரந்துபட்டுவாழும் இந்த சேர்பிய மக்களை ஒன்றிணைத்து, பரந்த சேர்பிய தேசத்தை உருவாக்கவேண்டும் என்பதுதான், சேர்பியத் தலைவர்களின் நெடுங்கால விருப்பமாகும்.

குரோசியா, சிலவேனியா தனித்தனி நாடுகளாக மாறியபின் அந்த நாடுகளில் வாழும் சேர்பிய இனத்தவர்கள் அரசியல் பலமிழந்தனர்.

இந்த நிலை தொடர்ந்து மற்றையக் குடியரசுகளும் யூகோசமஷ்டியிலிருந்து விலகித் தனிநாடுகளாக மாறுமாக இருந்தால், அது சேர்பியத் தேசியத்தைப் பலவீனப்படுத்தும் எனச், சேர்பியர்கள் அஞ்சுகின்றனர்.

குறோசியா தன்னைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்திய பின், குறோசியாவில் வாழும் சேர்பியர்கள் ஆயுதம் தாங்கி, தங்களது பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரச் சண்டையைத் தொடங்கினர். முதலில் இதை ஒரு உள்நாட்டு இனமோதல் என்றே உலகம் பார்த்தது. நாடுகள் பிளவுபடும்போது ஏற்படும் தவிர்க்கமுடியாத விளைவு எனவும் காரணம் சொன்னது.

எது எப்படியிருந்தாலும் ஒரு சோசலிச நாடு சிதைவுறுகின்றது என்ற மகிழ்ச்சியில், அநேக மேலைத்தேய நாடுகள் திளைத்திருந்தன.

ஆனால், சண்டையின் பரிமாணம் மாறி இறப்புகளின் வீதம் அதிகரித்து இலட்சக்கணக்கில் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்ததுடன், உலகசமூகத்தின் கருத்துக்களையும் மனிதாபிமான வேண்டுதல்களையும் சேர்பியத்தலைவர்கள் தட்டிக்கழித்து, தொடர்ந்தும் இனப்படுகொலைகளில் ஈடுபட்டபோதுதான், சேர்பியத்தலைவர்களின் பேரினவாத அரசியல் நோக்கம் தெளிவாகத்தொடங்கியது.

உண்மையில் சேர்பியத் தலைவர்களின் பேரினவாத முகத்தை உலகிற்குக் காட்ட உதவியது, பொஸ்னியா - கெர்சகோவினாவில் நடைபெறும் அநர்த்தங்களும், படுகொலைகளுமேயாகும்.

இனரீதியான கலப்புக்குடிகளான மூஸ்லிம்கள், பொஸ்னிய குறோசியர்கள், பொஸ்னிய சேர்பியர்கள் ஆகிய இன மக்களைக்கொண்டு பொஸ்னியா - கெர்சகோவினா அமைந்துள்ளது.

அங்கே வாழும் சேர்பியர்களும் சரி குறோசியர்களும் சரி, நாடு தங்களுக்குத்தான் சொந்தமென வாதிடுகின்றனர். அதேசமயம் அங்குள்ள முஸ்லிம்களும் நாடு தங்களுக்குத்தான் என்கின்றனர்.

குறோசியாவிலும் சேர்பியாவிலுமுள்ள சேர்பியர்களுக்கு, யூகோஸ்லாவிய ஆயுதப்படையினரே ஆயுதங்களை வழங்குகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இன்று யூகோஸ்லாவியா என அழைக்கப்படுவது சிறிய குடியரசுகளான கொசோவா, மொன்ரெநேகிரோ, வொச்வோடினா, மசிடோனியா உட்பட சேர்பிய குடியரசும் சேர்ந்த நிலப்பகுதியேயாகும். இதில் மசிடோனிய குடியரசும் இப்போது தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றது. ஏற்கெனவே யூகோசமஷ்டியிலிருந்து சிலவேனியாவும், குறோசியாவும் வெளியேறிவிட்டன. பொஸ்னியா - கெர்சகோவினா தனது சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்திக்கொண்டிருக்கின்றது.

யூகோஸ்லாவிய பிரச்சினை பற்றியும் இனப்படுகொலைகளில் சேர்பியர்களின் ஈடுபாடுகள் பற்றியும், சேர்பியர்களின் தலைவர் மிலோவிச் இடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது......

''ஒருபக்கத்தில் ஜேர்மனிய தொடர்புடைய குறோசியர்களாலும், மறுபக்கத்தில் கத்தோலிக்க திருச்சபையின் ஆதரவிலான கத்தோலிக்க குறோசியர்களாலும், இன்னொரு பக்கத்தில் இஸ்லாமிய உலகின் ஆதரவைப்பெற்ற பொஸ்னிய முஸ்லிம்களாலும் சேர்பிய இனம் மிகுந்த அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய இக்கட்டான நிலையில் ஒரு சேர்பியன் மற்றைய சேர்பியனை ஆதரிப்பது சகோதரத்துவ அடிப்படையில் அமைந்த இனஉறவு'' என்று, அவர் கூறுகின்றார்.

ஆனால், சேர்பியர்கள் கொடுக்கும் பொருள்வள, தத்துவார்த்த, தார்மீக ஆதரவென்பது இனச்சுத்திகரிப்பு என்ற ஒரு அபாயகரமான பேரினவாதக் கோட்பாட்டிற்கே, சேர்பியர்களை இட்டுச் சென்றுள்ளது.

அதாவது குறோசியா, பொஸ்னியா - கெர்சகோவினாவிலுள்ள மற்றைய இனமக்களை அடித்துத் துரத்திவிட்டு, பரந்த சேர்பியாவுக்கு அந்நிலங்களை உரிமைகோருவது என்ற அரசியல் நோக்கத்தையே, இனச்சுத்திகரிப்பு என்ற கோட்பாட்டின்கீழ் நடைபெறும் சம்பவங்கள் காட்டுகின்றன.

சேர்பியர்களின் இந்த இனச்சுத்திகரிப்பு என்ற நடைமுறை, இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரின் ஜேர்மனி செய்தவற்றிற்கு ஒப்பானதாகும்.

'உலகப் பொலிஸ்காரன்' என்ற பாத்திரம், போட்டிக்கு இடமின்றித் தனக்கேதான் என்று இறுமாந்திருக்கும் அமெரிக்கா, வளைகுடாப் பிரச்சினையில் தலையிட்டது போல யூகோஸ்லாவியாவில் தலையிடவில்லை.

இதற்குப் பல காரணிகளுண்டு; அவற்றுள் பிரதானமானவை - ஒன்று, யூகோஸ்லாவியாவில் எண்ணெய் வளமில்லை. அத்துடன் அமெரிக்கப் பொருளாதார நலன்கள் யூகோஸ்லாவியப் பிரச்சினைகளால் பாதிக்கப்படவுமில்லை.

இரண்டாவது, புவியியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பாரிய சிக்கல்கள் நிறைந்த இப்பிரதேசத்தில் தனது படைகளை இறக்கி, கெரில்லாச் சண்டைகளில் பாரிய அனுபவமும் - நிபுணத்துவமுமுடைய - சேர்பியர்களுடன் மோத, அமெரிக்கா துணிய மாட்டாது. அப்படியில்லாவிடினும் சேர்பிய கெரில்லாக்களை வலுவிழக்க வைக்க பல இலட்சம் அமெரிக்கப் படையினர் தேவை; ஐந்துஇலட்சம் படையினராவது தேவை எனச், சில இராணுவ நிபுணர்கள் கூறியுள்ளனர்,

மூன்றாவது, அமெரிக்கா முற்றுமுழுதாக நம்பியிருக்கும் தொழில்நுட்பம் மிகுந்த இராணுவப்போர்முறையை ஈராக்கின் பாலைவனங்களில் பயன்படுத்தியதைப்போல, காடுகளும் மலைகளும் நிறைந்த யூகோஸ்லாவியாவில் பிரயோகிக்க முடியாது.

நான்காவது, அமெரிக்காவில் தேர்தல்கள் நடைபெறவுள்ள இன்றைய காலகட்டத்தில், இத்தகைய ஆபத்தான இராணுவத் தலையீடொன்றிற்கு அமெரிக்க ஜனாதிபதி துணியப் போவதுமில்லை.

ஆனாலும் இந்தப் பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகள் அதிக கவனம் செலுத்துகின்றன, தனது கண்டத்தில் நடைபெறும் காட்டுமிராண்டித்தனத்தை நிறுத்த, ஐரோப்பிய சமூகம் ஆவல்கொண்டுள்ளது. அத்துடன் சண்டைகள் நடைபெறும் பகுதிகளிலிருந்து இலட்சக்கணக்கில் வெளியேறும் மக்கள், அயல் நாடுகளுக்குள் அகதிகளாகத் தஞ்சமடைகின்றனர்; இது அந்தந்த ஐரோப்பிய நாடுகளில் பாரிய சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளைக் கொண்டுவருகின்றது.

மேலும், சேர்பியர்களின் விஸ்தரிப்புவாத நோக்கம் தடுத்துநிறுத்தப்படாதுவிடின் பொஸ்னியா கெர்சகோவினாவைத்தன்னுடன் இணைத்துக் கொண்டபின், சேர்பியர்கள் தங்கள் இனச்சுத்திகரிப்புக் கொள்கையை அண்டை அயல் நாடுகள்மீதும், பிரயோகிக்க முற்படுவர். இதனால் சண்டைகள் பரவும்; பாரிய அகதிகள் பிரச்சினை தோன்றி ஐரோப்பிய சமூகத்தைச் சீரழித்துவிடும் என, ஐரோப்பிய சமூகம் அஞ்சுகின்றது.

சேர்பியப் பேரினவாதப் பூதத்திடமிருந்து விடுதலைபெற்று தன்னை ஒரு தனியரசாகப் பிரகடனப்படுத்த, பொஸ்னியா - கெர்சகோவினா மக்களுக்குச் சகல உரிமைகளும் உண்டு.

தேசிய இனங்களின் இச்சுயநிர்ணய உரிமையானது, உலகின் அனைத்துத் தேசியங்களினதும் பொதுவான இயல்புரிமையாகும்.

பொஸ்னியா - கெர்சகோவினாவின்சுயநிர்ணய உரிமை வேட்கையைத் தொடர்ந்தும் ஆயுதபலத்தின் மூலம் சேர்பியப் பேரினவாதம் நசுக்கமுற்படுமானால், பதிலுக்கு ஆயுதம் ஏந்தித் தற்காப்புப் போராட்டத்தை அது நடாத்துவது தவிர்க்க முடியாததுடன் - அத்தியாவசியமுமாகின்றது.

அவ்விதமாக - படிப்படியாக பொஸ்னியா - கெர்சகோவினா மக்கள் இராணுவபலம் பெறும்போதுதான், சேர்பியப் பேரினவாதத்திடமிருந்து தமது மக்களை மீட்டெடுக்கும் பலம் உருவாவதுடன், தமது சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் பலத்தையும் பெற்றுக் கொள்வார்கள். ❋

---

# ராஜன்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புல்லாவெளியில் ஆட்டிலறி செல் விழுந்து இரண்டுபேர் செத்து ஐந்துபேர் காயம் என்றால், மெடிக்ஸ் வானுக்கு றோமியோ நவம்பர்-

மெடிக்ஸ் வானைப் போகவிடாமல் மேலே கெலி நின்றால் கலிபர் அனுப்பவும் றோமியோ நவம்பர்-

குணாவின் குறாப்புக்கு அனுப்பிய சாக்குகளுக்கு சாக்குஊசி வேண்டும் என்றால், றோமியோ நவம்பர்-

வீரர் வீழ்ந்து - வியூகம் உடைந்து - எதிரிப் படை முன்னேறும் வேளையில், தனித்த வீரரை ஒன்றாய்ச்சேர்த்து எதிரியைத் தடுக்கும் வேலைக்கும், றோமியோ நவம்பர்.

எல்லாவற்றிற்கும் நின்றான். எல்லாப்பாரத்தையும் தானாய்ச் சுமந்தான்.

எப்படிப்பட்டவனை நாம் இழந்துவிட்டோம்.

மறைந்தபோது - அனுபவம் மிக்க போர்த்தளபதியாய் ராஜன் நின்றபோதும்-அவன் யுத்தகளத்தில் இருந்து தள்ளியே வைக்கப்பட்டிருந்தான். எங்கள் தலைவனின் பெருங்கனவுகளின் உறைவிடமாக ராஜன் இருந்தான். யாழ்ப்பாணச் சண்டையில் ஈடுபட்டிருந்த குழுக்களுக்கு உணவு விநியோகம் செய்யும் வேலையை அவனிடம் வலிந்து கொடுத்திருந்ததன் காரணம்-அவனை யுத்தகளத்தின் முன் முனையிலிருந்து எட்ட நிற்கவைப்பதற்கன்றி, வேறில்லை.

அனுபவம் மிக்க வீரன்.

அவனது அனுபவங்கள் மெய் சிலிர்க்கும் கதைகள்,

ஓய்வில்லாக் கடும் உழைப்பாளி.

அவன் மறையும்போது தலைவரின் பெருங்கனவில் உருவான அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளன். சிறந்த போர் அனுபவங்களை முன்னரே பெற்றிருந்த அவன், இங்கு எல்லா இடமும் இருந்து பொறுக்கி எடுத்த வீரர்களைப் பயிற்றுவித்தான். தன் அனுபவங்களைப் பிழிந்தெடுத்துக் கொடுத்தான், போர்க்கலை நுட்பங்களைக் கற்றான்; கற்பித்தான். நேர்த்தியான வேலைத்திட்ட ஒழுங்கமைப்பை, கண்டிப்பை, அன்பை, கடும்பயிற்சியை -

வியூகங்கள், விநியோகங்கள், வரைபடம்... என்று எல்லாவற்றையும் கற்றான்; கற்பித்தான்.

ராஜன் அமைதியானவன். தன்செயல்களினால்மட்டும் தன்னை அடையாளம் காட்டியவன் - ஆம், செயல்களினால் மட்டும்

எந்த வேலையாக இருந்தாலும் ராஜன் அதிகம் பேசுபவனல்ல. ஏதாவது இராணுவத்திட்டம் தீட்டப்படும் சந்தர்ப்பத்தில், பேசாது பார்த்தபடி- கேட்டபடி இருக்கும் ராஜன், திட்டம்தீட்டப்படுவது பூர்த்தியாவதற்கு முன்னுள்ள இடைவெளியில் பேசுவான். குறிப்பிட்டதிட்டம் செயல்வடிவம் பெறும்போது, அவனது யுக்தியின் பெறுமதி தெரியும்.

தனது கடமையை பூரணமாகச் செய்வதில் தன்னை வெளிப்படுத்துவான். எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றைய ஒருவரைக் குறை சொல்வதைக் காண்பதரிது. 'கடமையைச் செய்; பயனை எதிர்பாராதே' என்பதற்கு உதாரணமான - கர்மவீரனாய் விளங்கினான்.

அவனது வரலாறு முழுமையாக எழுதப்பட்டால், அது பெரும் காவியமாகும். இராணுவ வல்லுனர்களால் மட்டுமல்ல, மருத்துவ வல்லுனர்களாலும் நம்பமுடியாத அதிசயமாய் அவன் வரலாறு திகழும்.

எண்ணற்ற தாக்குதல்கள்; எண்ணற்ற தோழர்கள்; அவன் செய்தவைகள், அவன்பெற்ற அனுபவங்கள் எண்ணி முடியாதவை, எழுத்தில் அடங்காதவை. அவற்றின் கதை சொல்ல, சில தோழர்களும் - பல ஆயுதங்களும், இன்னும் விடுதலைப் போரில்......

அது மட்டுமல்ல, எங்கள் மக்களும், தமிழீழ மண்ணும், மரம் செடிகொடிகளும் அவனைச் சொல்லும். அந்த உறுதியின் உறைவிடம் உலாவிய பூமி எங்களது என்பதைத், தமிழீழம் தலை நிமிர்ந்து சொல்லும்.

— பொட்டு ❋

---

## காட்டுச் சிக்கல்

நிலவு
தன் ஒளிமழையால்
பூமித்தோழிக்குச் சேதி அனுப்பினாள்-
காட்டுமரங்கள் தடுத்துநிறுத்தி
இப்படிக்கூறின:
''போர்செய்த புலிகளைத்
தாலாட்டி உறங்கவைக்கிறாள்,
அவளைத் தொந்தரவு செய்யாதீர் ..''
இருப்பினும்...
ஒருசில ஒளிக்கற்றைகள்,
உண்மையை உறுதிப்படுத்த
எட்டிப்பார்த்தன!

— இரும்பொறை

---

## அராலித்துறைச்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் வலயத்துக்குள்ளேயே இவர்கள் வீரச்சாவடைந்தனர்; இவர்களது உடல்கள்கூட எதிரியிடமே சிக்கின.

இத்துணிகர - வீரசாதனையைப் புரிந்த சிறப்பு வேவுப்பிரிவின் போராளிகளுக்கு, தலைவர் பிரபாகரன் அவர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்ததுடன் எமது மக்களுக்கு அவர்களது பெயர் விபரங்களைத் தெரியப்படுத்தினார்.

இவ்விதம் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுவிட்ட அராலித்துறைக் கண்ணிவெடியின் பின்னால் உயர்ந்த தியாகமும், மிகப்பெரிய வீரமும், துணிவும் அடங்கியுள்ளன. ❋

# தாய் நிலத்தைக் காதல் செய்

**1992 ஆடி 12ஆம் திகதி, நள்ளிரவு 1.00 மணி.**
**இடம்: கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம்.**

தம்பி டேய்!
நீ கோப்பாய்த் தவராசா வாத்தியின்ரை
தம்பியல்லே......
எங்கை பயணம் ...... கனடாவோ?
அடிசக்கை......
போங்கோ...... போய்த்திரும்பிப்
பிறகெல்லாம் முடிஞ்ச பின்னர்
வாங்கோ, கிழடுகள் நாம்
வரவேற்கக் காத்திருப்பம்.

**1992 ஆடி 20ஆம் திகதி, மு. ப. 10, 00 மணி.**
**இடம்: கோண்டாவில் தோட்டவெளி.**

நெருப்புக்குள் நின்றும் நிமிர்ந்தோம்.
சிரிக்கின்றோம்.
இருப்பிழந்து போகாமல் இன்னும் இருக்கின்றோம்.
பெருமைப்படு,
தேகம் புல்லரிக்க நின்றாடு,
தொழுதெம் மண்மீது தொடு.
கண்ணில் வை.
புழுதி மண்ணானாலும் புரண்டு. விழுந்தெழும்பு.
தாயை நிகரெங்கள் தாயகத்தைக் காதல் செய்.
வாயால் புகழ்ந்தேற்றி வாழ்த்து.
இம்மண்ணில்,
வீரம் விளைக்கின்ற வீரர்களை மனத்தெண்ணு,
பாரம் சுமக்கின்ற பாலகரைக் கட்டியணை.
நேற்றுவரை தூங்கி நினைவிழந்து,
எதிரியெனும்,
கூற்றுவனுக் கிலக்காகிக்
குலைந்தழிந்த தமிழினத்தை
ஆற்றுப்படுத்தவந்த அத்தலைவன் பெயரைச்சொல்.
மாரியெனக் குண்டுமழைபொழியும்,

எறிகணைகள்
கூவிவரும்,
வீதிகுழியாகும்,
நாங்களிங்கு
நாறிப்போய் விட்டோமா?
நடைப்பிணங்களானோமா?
இல்லை......
இதற்குள்ளே இருக்கப் பழகி விட்டோம்.
புல்லும் நிமிர்ந்து போர்க்கோலம் பூண்டது போல்
வெல்வோம், எனும் உறுதி
வீச்சோடு வாழ்கின்றோம்.
ஆனை வந்தெங்கள் அழகான வயலுக்குள்,
சேனை, புலவுக்குள்,
தின்கிறது.
வழியாலே......
போம் வாற பேரைப் பிடித்து மிதிக்கிறது.
'காய் கூய், என்றாரும்
கத்தித் தொலைத்தாலும்
வாய் நோகுதன்றி "வாரணங்கள்" போகுதில்லை.
வெடிகொளுத்திப் போட்டால் வெருண்டோடும்
அதற்கிங்கே
பொடியள் சிலபேர்கள் போதுமா?
கனபேர்கள்
வேண்டும், என்செய்வோம்?
விருத்தெரிந்த இளசெல்லாம்
கூண்டு திறந்து...... குருவிகள்போல்......
கடற்பரப்பைத்
தாண்டி,
தங்களது,
தனிச்சுகமே சுகமென்று
திக்கொன்றாய்ப் பறந்து திசைமாறிப் போயினவே.
தக்க தருணத்தில் தாய்மண் துணையின்றித்
துக்கித் திருக்கிறது.
தொப்புள் கொடியுறவு
எல்லாம் பொய்யாகி, இல்லாததொன்றாகிப்
பல்தேச மெங்கும் பறந்து சிதறினவா?
என்றாலும் நாங்கள் இருப்பை இழக்கவில்லை.
தென்னை இளநீரும்
செவ்வலரிச் சிறுபூவும்
கண்மலர்த்தி வேம்பு காய்பழமும் தருகிறது.
கத்தரியும்,
வெண்டிக்கன்றும்,
பூக்கிறது.
சட்டிக்கரணை தழைக்கிறது.
ஆதலினால்,
இந்தமண் அழகோடு இன்றும்தான் இருக்கிறது -
எந்தத்துயர்வரினும் இனிக்கலக்கம் கொள்ளாது.
ஆழக்கிணறு,
ஆடுகால்ப் பூவரசு,
நீளக்கிடக்கின்ற நெல்வயல்கள்
உள்ளமட்டும்
காலில் விழுந்தெவர்க்கும் கைகட்டி நிற்காது.



நேற்றென் பேரன் நேர்வந்தான்.
எனைக்கட்டி
காற்றில் மிதந்தான், களித்தான்,
முத்தமிட்டான்,
வரம்பில் இருந்தான், வாய்க்காலின் தண்ணீரை
விரும்பிக் குடித்தான், வெளிக்கிட்டான்.
"எங்கயடா போகின்றாய்?"
என்றேன்,
நின்றான்.
''சண்டைக்கு'' என்று சத்தமிட்டுச் சொல்லிவிட்டுச்
சென்றான்.
இனியெங்கள் தேசம் பணியாது.
தாய்மண்ணைக் காதலிக்கும் தளிர்கள் இருக்குமட்டும்
பாய்விரித்தெம் தேசம் படுக்காது,
போர் செய்யும்!

எம்மால் வெளியிடப்பட்ட முத்தமிழ் விழா மலரில் (1992) வெளிவந்த புதுவை இரத்தினதுரை எழுதிய கவிதையை, இங்கு மறுபிரசுரம் செய்கின்றோம்.